# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 27-08-1993

அன்பளிப்பு 40P



உள்ளே.....

- விழுதுகள்: லெப். நித்தி/புகழேந்தி
- அவர்கள் சுமப்பது விறகல்ல பாரச்சிலுவை
- மதகுருமாரும் சமாதான முயற்சிகளும் அரசாங்கத்தின் அக்கறையீனமும்
- சிறுகதை: நெஞ்சில் நிற்கும் வாழ்வு
- காஷ்மீர் ஆளப்படவில்லை தக்க வைக்கப்பட்டிருக்கிறது


# தென் தமிழீழத்தில் இராணுவ நெருக்குதல்

## தேர்தல் அறிவிப்பு மூலம் ஸ்ரீலங்கா அரசின் புதிய இராணுவ உத்தி

தமிழீழ மக்கள் மீது இராணுவ ஆக்கிரமிப்புக்களை நடாத்திக் கொண்டிருக்கும் சிறீலங்கா அரசு, தமிழீழ விடுதலைப் புலிகளால் தனக்கேற்படும் தொடர்ச்சியான இராணுவத் தோல்விகளுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில், தமிழீழ மக்களின் ஒருமைப்பாட்டையும் மனவுறுதியையும் குலைப்பதற்கான முயற்சிகளை துரிதப்படுத்தி வருகின்றது. இதன் ஒரு வழியாக திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியாப் பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கும், நகர சபைகளுக்கும் தேர்தல் நடத்தப்போவதாக அறிவித்துள்ளது. இராணுவ இராஜதந்திரத்துடன் கூடிய இவ்வறிவிப்பு மூலம் சிறீலங்கா அரசு தனது இறைமை இப்பகுதிகளில் இருப்பதாகவும் தனது நிர்வாகம் இப்பகுதிகளில் தொடர்வதாகவும் சர்வதேச சமூகத்துக்கு காட்ட முயல்கிறது. இதன் மூலம் விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் அவர்களின் அரசு நோக்கிய அரசின் (Defacto Government) நிர்வாகம் நடைபெற்று வரும் பரப்பளவை குறைத்துக் காட்டலாம் என்பது அரசின் உள்நோக்கு. அவ்வாறு செய்வதன் மூலம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தை தமிழர்களின் தாயகமாக அங்கீகரிக்கும்படியும் விடுதலைப் புலிகளின் அரசு நோக்கிய அரசை சட்டரீதியாக அங்கீகரிக்கும்படியும் சர்வதேச ரீதியாக ஏற்படுத்தப்பட்டுவரும் அழுத்தங்களை திசை திருப்பலாம் என சிறீலங்கா அரசு பகற்கனவு காண்கின்றது.

### திட்டத்தின் வடிவம்

இந்த தேர்தல் அறிவிப்பு மூன்று முக்கிய நோக்கங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. 1). சிறீலங்கா அரசின் செயல்முறையில் அழிந்துபோய்விட்ட இறைமையை மீளப் புதிப்பித்து சர்வதேச உலகிற்கு சிறீலங்கா ஒற்றையாட்சிக்குக் கீழ் வழமையான முறையில் இயங்குகிறது எனக் காட்டல். 2). தென் தமிழீழத்தில் இராணுவக் குவிப்பின் ஊடாக தேர்தல் நடாத்தினால் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடைமோதல்கள் ஏற்படும். இதனைச் சாட்டாக வைத்து தென் தமிழீழ மக்களது பிரதேசங்களுள் இராணுவ ஊடுருவல்களை நடாத்தி அவர்களைக் கொன்றொழித்து விட்டு, இவ்வழிகளுக்குக் காரணம் விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கை எனக் கூறி வடக்கு-கிழக்குப் பிரதேச வெறியைத் தூண்டுவது. இவ்விதம் செய்வதன் மூலம் தமிழ் மக்களை வடக்குக் கிழக்கு எனப் பிளவுபடச் செய்து 'தமிழரின் தாயகம்' என்று கூறப்படும் பிரதேசத்தை துண்டாட விரும்பும் தனது நரித்தனத்தை நிறைவேற்றுவது. 3). தேர்தல் நடைபெற உள்ள பிரதேசங்களில் வாழும் முஸ்லீம் மக்கள் மீது சமுதாயக் கொலைகளைக் கட்டவிழ்த்துவிட்டு அவற்றுக்கான பழிகளை வழமைபோல் விடுதலைப் புலிகள் மேல் போட்டு முஸ்லீம் -தமிழர் கல


தொடர்ச்சி 14ம் பக்கம் ....




தமிழீழப் படைத்துறைப்பள்ளி மாணவர்களின் அணிவகுப்பு

## ஐ.நா.வின் தலையீட்டை நிராகரித்த ஸ்ரீலங்கா

# பொம்மை நிர்வாகத்தை உருவாக்க துடிக்கிறது

இலங்கைத் தீவின் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு, ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டூடாக விடுதலைப் புலிகளும் -சிறீலங்கா அரசும் தீர்வு காண வேண்டுமென நோபல் சமாதான பரிசைப் பெற்ற நால்வர் சமர்ப்பித்த சமாதானத் திட்டத்தை, சிறீலங்கா அரசாங்கம் எடுத்த எடுப்பிலேயே நிராகரித்துவிட்டது.

பத்து நாடுகளின், பத்து நோபல் பரிசைப் பெற்றவர்களை பணிப்பாளர்களாகவும் போசகர்களாகவும் கொண்ட உலகளாவிய ஒத்துழைப்புக்கான உலக சமாதான சபையின் சார்பாக முன்வைக்கப்பட்ட இச்சமாதானத் திட்டத்தை, ஆய்வு நிலைக்குக் கூட எடுக்க விரும்பாத சிறீலங்கா அரசு 'உள்நாட்டுப் பிரச்சினைக்கு வெளியார் தலையீடு தேவையில்லை' என்ற தனது வழமையான பதிலை இவர்களுக்கு அனுப்பி சமாதான முயற்சிகளை முறியடித்து விட்டது.

இம்முயற்சியில் ஈடுபட்ட 1967 இல் இரசாயனத்துறை சார் நோபல் பரிசைப் பெற்ற அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் ஜோர்ஜ் வலட், வடஅயர்லாந்தில் புரட்டஸ்த்தாந்து -கத்தோலிக்கர் மோதலை முடிவுக்கு கொண்டு வந்தமைக்காக 1977 இல் நோபல் பரிசைப் பெற்ற பிரித்தானியாவைச் சேர்ந்த மெய்றீட் கொரிகன் மாக்குயர், 1977 இல் இரசாயனத்துறைசார் நோபல் பரிசைப் பெற்ற பேராசிரியர் இலியா பிரிகோஜின், 1969 இல் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற பேராசிரியர் ஜேன் தின்பேர்ஜன் ஆகியோர், சிறீலங்கா அரசு தமது சமாதானத்திட்டத்தை எடுத்த எடுப்பிலேயே நிராகரித்து விட்டதால், இது குறித்து விடுதலைப் புலிகளுடனும் சிறீலங்கா அரசாங்கத்துடனும் பேசுவதற்காகவும் இலங்கையில் உள்ள மற்றைய மனித உரிமை, சமாதான அமைப்புக்களுடன் தமது திட்டத்தை எடுத்து விளக்குவதற்காகவும் இலங்கைக்கு விஜயம் செய்ய இருப்பதாகத் தெரிகிறது. இக்குழு இலங்கைக்குச் செல்ல விரும்புவதாக, இச்சமாதானத் திட்டத்தை முன்வைத்த உலகளாவிய ஒத்துழைப்புக்கான உலக சபையின் செயலாளரான ஜேம்ஸ் நிக்லஸ் அறிவித்துள்ளார். ஜேம்ஸ் நிக்லஸ் இலங்கைத் தமிழர். இவ


தொடர்ச்சி 14ம் பக்கம் ....


# மண்கிண்டி தாக்குதலின் விளைவாக இராணுவம் பின்வாங்கியது

மணலாறு, மண்கிண்டி தாக்குதலின் விளைவாக சிறீலங்கா இராணுவம், தமிழீழப் பிரதேசங்களில் இராணுவ முகாம்களை பரவலாக வைத்திருக்க அஞ்சுகிறது. இதனால், சிறிய இராணுவ முகாம்களையும் இராணுவக் காவல் நிலைகளையும் குறைத்து அருகிலுள்ள பெரிய இராணுவ முகாம்களைப் பலப்படுத்தத் தொடங்கியுள்ளது.

மன்னாரில் பாலைக்குழி, அடம்பன், நானாட்டான், உயிலங்குளம், சூரியக்காடு, முதலைக்குத்தி போன்ற இடங்களில் இருந்து இராணுவத்தினர் பின்வாங்கி தள்ளாடி, வங்காலை முகாம்களுக்குச் சென்றுள்ளனர். இவ்விதம் பின்வாங்குவதன் மூலம், பெரிய முகாம்களையாவது தக்க வைத்துக்கொள்ள சிறீலங்கா இராணுவம் துடிக்கிறது. சிறீலங்கா இராணுவத்தினர் அச்சம் காரணமாக நடமாடத் தயங்குகின்றனர். இதனை ஈடு செய்வதற்கு அவர்களை ஒரே இடத்தில் குவியவைத்து, மனத்தெம்பை ஊட்ட சிறீலங்கா இராணுவத் தலைமை முயற்சிக்கின்றது. சிறீலங்கா ஜனாதிபதி சமீபத்தில், பகலில் படுத்துத் தூங்கி இரவில் நடமாடும்படி சிறீலங்கா இராணுவத்தினருக்கு ஆலோசனை கூறியுள்ளதாக வெளிவரும் செய்தி சிறீலங்கா இராணுவத்தினர் எவ்வளவு தூரத்துக்கு அச்சமடைந்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றது.

இது ஒருபுறம் இருக்க, தேர்தல் நடாத்துவதற்கு தென்தமிழீழத்திற்கு இராணுவத்தினரை அனுப்புவதற்காகவே இப்பிரதேசங்களை இராணுவத்தினர் கைவிட்டு வருவதாக சிறீலங்கா அரசாங்கம் இராணுவப் பின்வாங்கலுக்கு சாட்டுக்கூறியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# தீர்வு தானாக வரும்?

இலங்கைத் தீவின் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு தலையிடுமாறு, சிறீலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும், ஐக்கிய நாடுகள் சபையை அழைக்க வேண்டும் எனக் கோரும் சமாதானத் திட்டமொன்றை, நோபல் பரிசைப் பெற்ற நான்கு சர்வதேசப் பிரமுகர்கள் சிறீலங்கா ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தனர். இத்தீர்வை ஏறெடுத்துக் கூடப் பார்க்காத சிறீலங்கா அரசாங்கம், "உள்நாட்டுப் பிரச்சினையில் வெளியார் தலையீடு தேவையில்லை" என்ற வழமையான பதிலோடு இத்திட்டத்தை நிராகரித்துவிட்டது.

இதற்கிடை ஐக்கிய நாடுகள் (சிறுபான்மையினர் பாதுகாப்பு தொடர்பான) உப ஆணைக்குழுவில் அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம், நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இலங்கைத் தீவின் தேசிய இனங்களுக்கிடையிலான நெருக்கடியில் ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டும் என்னும் ஒரு நகல் தீர்மானத்தை முன்னறிவித்திருந்தன. ஆயினும் இத்தீர்மானம் விவாதத்திற்குக் கொண்டு வ:ரப்படவில்லை. இது தொடர்பாக சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சர் கமீது "நகல் தீர்மானம் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றமை, இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கு அக்கறையுடனான முயற்சியை சிறீலங்கா அரசாங்கம் மேற்கொள்கிறது என்றும் மனித உரிமைகள் பேணப்படும் நிலைமை இலங்கையில் மேம்பட்டிருக்கிறது என்றும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டிருப்பதையே இது உணர்த்துகிறது என நான் நம்புகிறேன்" எனக் கூறியுள்ளார்.

**சர்வதேச மத்தியஸ்தத்தை மறுக்கும் சிறீலங்காவின் செயலை, நோபல் பரிசு பெற்ற நால்வரின் திட்டம் நிராகரிக்கப்பட்டமை தெளிவாக்குகிறது. அதிலும் எடுத்த எடுப்பிலேயே ஆராய்ந்து கூடப் பார்க்காது நிராகரித்தது.**

சிறீலங்கா அரசுக்கு அரசியல் தீர்வு எதிலுமே அக்கறையில்லை என்பதை இது காட்டுகிறது. அதேவேளை, மனச்சாட்சி உள்ள உலக மக்களின் குரல்வளையையும் அமுக்கிப் பிடிக்க சிறீலங்கா அரசால் முடியும் என்பதுபோல் வெளியுறவு அமைச்சர் கமீது பேசியுள்ளார். சர்வதேச சமூகம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மௌனமாக இருப்பதுதான் சிறீலங்கா அரசாங்கத்திற்கு அதனது தமிழ் இன அழிப்புப் போக்குக்கு உற்சாகமும் உத்வேகமும் அளிக்கிறது என்பதை சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சரின் பேச்சு தெளிவாக்குகிறது.

இந்நிலையில், சர்வதேச சமூகத்தின் பொறுப்பு அதிமுக்கியமானதாகிறது. அரசாங்கங்கள்தான் தமது சுயநலன்களுக்காகத் தடுமாறினாலும், உலகின் மனச்சாட்சியுள்ள மனிதர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையின் வடிவைத் தெளிவாக விளங்கி வருகின்றனர். இதனால் சர்வதேச சமூகம், சிறீலங்கா அரசாங்கத்தின் மீது தீர்வு காணும்படி அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டிய நேரமிது. இல்லையேல் சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சர் கூறுவதுபோல், சிறீலங்கா அரசின் போலித்தனத்தையும் இனஅழிப்பையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்கிறது என்றுதான் பொருள். இதற்குத் துணைபோன பழியை வரலாறு சர்வதேச சமூகத்தின் மீது சுமத்திவிடும்.

இது ஒருபுறம் இருக்க, நடைமுறையில் செயல் வடிவில் சிறீலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வைக் காட்டுகிறது? "படைப்பலத்தைப் பெருக்குகிறது." அவசர அவசரமாக மேலும் பத்தாயிரம் பேரை இராணுவத்தில் சேர்க்கிறது. சிங்களவரிடையே இராணுவத்தில் சேரும் ஆர்வம் குறைவாக காணப்படுவதனால் இராணுவத்தில் சேர்வதற்கான கல்வித் தகுதியை எட்டாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பாக சிறீலங்கா இராணுவம் குறைத்துள்ளது. படையை விட்டு விலகி ஓடிய எண்ணாயிரம் பேரில் இரண்டாயிரம் பேரை மீளவும் எவ்வித நடவடிக்கையுமின்றி படையில் சேர்க்கிறது. 88,500 ஆட்களை ஆயுதப் படையினராக வைத்திருந்த சிறீலங்கா இப்போது 98,500 ஆக ஆயுதப் படையின் பலத்தை அதிகரிக்கிறது. இதைவிட 30,000 பொலிசாரையும் 18,000 ஊர்காவல் படையையும் 12,000 தொண்டர் படையையும் ஆயுத மயமாக்கப்பட்ட மனிதர்களாக சிறீலங்கா வைத்துள்ளது. சுருக்கமாகச் சொன்னால் சிங்களவர்கள் முழுப்பேரையுமே .ஆயுதமயமாக்கியாவது தமிழரை அடிமைகொள்வதே சிறீலங்கா அரசின் பேரவா.

**இவ்விதமான ஆயுதமயமாக்கலைச் செய்துகொண்டு அரசியல் தீர்வு காணவிரும்புவதாக சிறீலங்கா கூறுவதை, சர்வதேச சமூகத்தவர் இனியும் நம்புவது தங்களைத் தாங்களே ஏமாளியாக்கும் செயல்.**

**ஏன் இந்த ஆயுதமயமாக்கல்?** தமிழர் தாயகத்தையும் தமிழர்களையும் அழித்தொழித்தாவது அடிமைகொள்ளவே இது. இதனைத் தான் தமிழீழத் தமிழர்கள் எதிர்க்கின்றனர். யுத்தம் தமிழீழ மக்களின் மேல் திணிக்கப்பட்டுள்ளது. நிராயுதபாணியாக அகிம்சை வழியில் எதிர்த்துப் பலன் காணாத நிலையில் தான் தமிழீழ மக்கள் ஆயுதக் கோலம் பூண்டனர். தம்மையும் தமது மண்ணையும் தமது மக்களையும் தமது உடைமைகளையும் பாதுகாக்க அவர்கள் மேற்கொண்ட சட்ட பூர்வமான நடவடிக்கையே தமிழீழ மண்மீட்புப் போர்.

இந்த சத்தியங்களை சர்வதேச சமூகம் ஏற்று தமிழ் மக்களின் ஆயுத எதிர்ப்பை சட்டபூர்வமாக அங்கீகரிக்கும்படி ஐக்கிய நாடுகள் சபையைக் கோருவதே சிறீலங்கா அரசை வழிக்குக் கொண்டுவர ஒரேவழி. எனவே சிறீலங்கா ஜனாதிபதியிடம் விடுக்கப்படும் எக்கோரிக்கையும் தமிழீழ மக்களுக்கு நீதியான தீர்வைத் தராது. ஆகவே, ஐக்கிய நாடுகள் சபையிடம் கேளுங்கள், தமிழீழ மக்களின் சட்டபூர்வமான ஆயுதப் போராட்டத்தை அங்கீகரிக்கும்படி. அப்போது தீர்வு தானாக வரும். மனச்சாட்சியின் மைந்தர்களாக உள்ள ஒவ்வொரு சர்வதேச சமூக உறுப்பினரிடமும் நாம் விடுக்கும் வேண்டுகோள் இதுதான். ■

## 6000 விதவைகளின் அவலம்

# தென்தமிழீழத்தில் கொடுமை

சிங்கள ஆயுதப் படைகளின் தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கைகள் காரணமாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் 6000 க்கும் மேற்பட்ட பெண்கள், விதவைகளாக்கப்பட்டு, பெரும் இன்னல்களை அனுபவித்துவருகின்றனர்.

1990 யூனில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமாகியதிலிருந்து இன்றுவரை, மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களப் படையினரால் திட்டமிட்ட முறையில் நடத்தப்பட்ட இன ஒழிப்பு நடவடிக்கையினால், பெரிய அளவிலான இனஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றதாகவும், சிங்களப் படைகளின் இந்தத் திட்டமிட்ட கொடும்செயல் காரணமாக, ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் குடும்பத்தலைவர்களை இழந்து, விதவைகளாக்கப்பட்டதாகவும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் திரட்டிய புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில், விதவைகளாக்கப்பட்ட பெண்களில் பெரும்பாலானோர் இளம்பராயத்தவர் என்றும், 17 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இளம் விதவைகள் எவ்வித வசதியுமின்றிப் பல இன்னல்களைச் சுமந்து, அகதி முகாம்களில் தமது வாழ்நாளை ஓட்டிவருகின்றனர். இந்த அவல நிலையுடன் தொடர்ந்தும் இப்பெண்கள் சிங்கள இராணுவத்தின் பயங்கரவாதத்திற்கும், பாலியல் வன்முறைகளுக்கும் ஆளாகிவருகின்றனர். அகதி முகாம்களிலும் இராணுவத்தினர், தமிழ் மக்களுக்கு எவ்வித உதவிகளையும் வழங்காது, பிற நிறுவனங்களையும் வழங்கவிடாது தடுத்து பெரும் அனர்த்தங்களைப் புரிந்து வருகின்றனர். ■

# சித்திரவதைக் கூடமாக பலாலி இராணுவ முகாம்

## ■ விடுவிக்கப்பட்டவர் தெரிவிப்பு

தமிழ் இளைஞர்களின் கொலைக்களமாகவும், சித்திரவதைக் கூடமாகவும் பலாலி சிறீலங்கா இராணுவ முகாம் வளர்ச்சியடைந்து வருகிறது.

பல்லேகல புனர்வாழ்வு தடுப்பு முகாமில் இரண்டரை வருடங்கள் சிறீலங்கா இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டு கடந்த 14ம் திகதி விடுவிக்கப்பட்டு வந்து சேர்ந்த சுப்பர் மடத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை இந்திரலிங்கம் (வயது 40) என்பவர் வடமராட்சிச் செய்தியாளருக்கு முன் கண்டவாறு தெரிவித்தார்.

பலாலி இராணுவ முகாமில் சுமார் ஒரு வருடகாலம் மற்றைய இளைஞர்களுடன் சேர்த்து கையில் விலங்கிட்ட நிலையிலும் கண்கள் கட்டப்பட்ட நிலையிலும் வைக்கப்பட்டிருந்தேன். இத்தகைய காலப்பகுதியில் இருண்ட ஓர் உலகத்தில் சஞ்சரிப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.

உணவு உண்பதானாலும், இயற்கைக் கடன்களைக் கழிப்பதானாலும் கையில் பூட்டிய விலங்குடனும், கண்கள் கட்டப்பட்ட நிலையிலுமே நடைபெற்றன. விடுதலைப் புலிகளுடன் மோதி இராணுவத்தினருக்கு பேரிழப்பானால் அதை நாங்கள் அன்றிரவு அறிந்துகொள்ள முடியும். அன்றிரவு பூராவும் இராணுவத்தினர் எங்களைக் கண்டபடி தாக்கிக் கொண்டேயிருப்பார்கள். இரவில் நிம்மதியாகவும் நித்திரை செய்யவும் விடமாட்டார்கள். அவர்களின் அட்டகாசங்கள் அதிகரித்திருக்கும். இதிலிருந்து மோதல் சம்பவம் நடந்திருக்கின்றது என்று புரிந்துகொள்வோம்.

நானும் இரு நண்பர்களுமாக பருத்தித்துறைக் கடலில் வைத்து 25. 2. 91 இல் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காரைநகர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு 10-3-91 இல் பலாலி முகாமுக்கு மாற்றப்பட்டோம். பலாலி முகாமில் ஒன்றரை வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டு இராணுவத்தினரின் பல்வேறு தாக்குதலுக்கும் ஆளானோம். பின்னர் 16-3-92 இல் களுத்துறைக்கு மாற்றப்பட்டு எட்டு மாதங்களின் பின்னர் பல்லேகல முகாமில் நான்கு மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டபின் விடுவிக்கப்பட்டேன்.

பலாலியில் இருந்தபோது அங்குள்ள இராணுவத்தினர் எங்கள் படகையும், வலை, எஞ்சின் போன்றவற்றையும் எனது கையில் இருந்து மோதிரம், மணிக்கூடு போன்றவற்றையும் பறித்துவிட்டனர்.

பலாலி முகாமில் கைது செய்யப்பட்டு கொண்டு வருபவர்களில், ஐம்பது சதவீதமானோர் இராணுவத்தினரின் அகோர சித்திரவதைகளுக்கு உட்படுத்திச் செல்லப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். ■

# தீக்குளிக்கும் "கடமைவீரன்"

தமிழ் அரச ஊழியர்களின் மேலிட விசுவாசம். பிரபலம் மிக்கது. மேலிடம் ஆங்கிலேயராக இருந்தால் என்ன, சிங்களவராக இருந்தால் என்ன? இவர்கள் நன்றியுடையவர்களாக செயல்படுவதில் சளைக்காதவர்கள். சில விடயங்களில் 'சாமி விடை கொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்கமாட்டார்' என்பது போல் செயற்படுபவர்கள். இதனால், மேலிடத்தின் விருப்புணர்ந்து செயற்படும் அதிகாரிகளாக விளங்குபவர்கள். இந்த வரிசையில், நிதி அமைச்சின் செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் முதன்மையானவர்.

திரு. பாஸ்கரலிங்கம், சிங்களப் பேரினவாதம் தமிழருக்கு எதிராக அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளபோதும், அரசிற்கு விசுவாசமாக இருந்தவர். தனது குடும்பத்திற்கு, கொழும்பில் பாதுகாப்பில்லை என்ற நிலையில் சென்னையிலும், இலண்டனிலும் அவர்களை குடியமர்த்தி விட்டு கொழும்பில் தங்கியிருந்து கடமை புரிபவர். 'சிங்கள அரசிற்குப் பணி செய்து கிடப்பதே எனது கடன்' என்ற 'உயரிய இலட்சியம்' கொண்டவர்.

இவ்வாறாக, திரு. பாஸ்கரலிங்கம் சேவை செய்வதன் மூலம், அவர் தன்னை தமிழன் என்பதற்கு அப்பால், ஒரு விசுவாசம் மிக்க ஊழியராகக் காட்ட முற்படலாம். அவ்வாறு கருதலாம். ஆனால், பாஸ்கரலிங்கத்தைப் பொறுத்து, முதலில் தமிழர், பின்னரே அரச ஊழியர் என்பதே சிங்களப் பேரினவாதத்தின் நிலைப்பாடாகும். தனது சேவையால் பௌத்த பேரினவாதத்தின் சிந்தனையில் பாஸ்கரலிங்கத்தினாலோ, அன்றி வேறு லிங்கங்களினாலோ மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியவில்லை.

திரு, பாஸ்கரலிங்கத்தின் மீதான இக்காழ்ப்பும், வெறுப்பும் சிங்கள பேரினவாதிகளிடம் இன்று மட்டும் ஏற்பட்டதல்ல. நீண்ட காலமாகவே சிங்களப் பேரினவாதிகளிடம் இருந்தது. ஆனால், இது தனியாக பாஸ்கரலிங்கத்தின் மீதானதல்ல. ஒட்டுமொத்தமாக தமிழர்கள் மீதானது. பல வருடங்களுக்கு முன் பாராளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் இக்காழ்ப்புணர்வின் வெளிப்பாடாகக் குறிப்பிட்டார்: "இலங்கையை இன்று மூன்று லிங்கங்களே ஆள்கின்றன" என்று. இது விசுவாசம் மிக்க மூன்று தமிழ் அரச அதிகாரிகள் மீது இருந்த வெறுப்பின் எதிரொலியாகும்.

இன்றோ, நிலை மேலும் உயரே சென்றுள்ளது. அண்மையில், 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு பாஸ்கரலிங்கத்தைப் பேட்டி கண்ட ஒருவர், இலண்டனில் உள்ள அவரது சகோதரன் ஊடாக அவர் விடுதலைப் புலிகளுக்குத் தகவல் வழங்குவதாக சிங்களப் பேரினவாதிகளிடம் நிலவும் ஒரு வதந்தியைக் கேள்வியாகக் கேட்டார். இதற்குப் பதிலளிக்க வேண்டிய ஓர் அவல நிலை பாஸ்கரலிங்கத்திற்கு ஏற்பட்டது.

தற்பொழுது, சிறீலங்காப் பொருளாதாரம் வங்குரோத்து நிலை அடைந்தமைக்கு பாஸ்கரலிங்கமே காரணம் என்ற தொனியில், மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. பந்துல குணவர்த்தனா பாராளுமன்றத்தில் பேசியுள்ளார். திறைசேரி வங்குரோத்து அடையும்வரை பாஸ்கரலிங்கம் உறங்கிக் கொண்டிருந்தாரா? என அவர் வேள்வி எழுப்பியுள்ளார். நல்லவேளை, யுத்தத்தை பாஸ்கரலிங்கம்தான் நடத்தி சிறீலங்கா அரசாங்கத்தை குட்டிச் சுவராக்கிவிட்டார் என்ற குற்றச்சாட்டு இன்னமும் வைக்கப்படவில்லை. ஆனால், அவ்வாறு அவர்கள் கூறினாலும் அதில் ஆச்சரியமில்லை.

தொடர்ச்சி 3ம் பக்கம் ....

# தமிழ்க் கைதிகள் உயிருடன் எரிக்கப்பட்டார்கள்!

## ■ விடுதலையானவர் தகவல்

பலாலி மற்றும் இதர சிறிலங்கா முகாம்களில் நடந்துகொண்டிருக்கும் பயங்கரச் சம்பவங்கள் பற்றி, விடுவிக்கப்பட்ட ஒரு கைதியின் அதிர்ச்சி தரும் தகவல்கள்.

சிறிலங்கா ஆயுதப்படைகளால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் மக்கள் கடும் கொடூரமான சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர். சிலர் படு பயங்கரமான விதத்தில் கொல்லப்பட்டுள்ளனர். சிலர் உயிருடன் எரிக்கப்பட்டும் உள்ளனர்.

சிறிலங்கா முகாம்களில் நடக்கும் இப் பயங்கரவாதங்கள், விடுவிக்கப்பட்ட சில கைதிகள் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி மூலம் அம்பலமாகியுள்ளன.

கடந்தவாரம் பல்லேகல (PALLEGALA) இராணுவ முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட அகஸ்ரின் என்பவரின் அறிக்கையின்படி, அவர் பலாலி இராணுவ முகாமை, ஒரு சித்திரவதை நடாத்தப்படும் குகையாகவே விமர்சித்தார்.

மேலும் அவர் கூறுகையில்:-
பூநகரி, கல்முனைக் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது சிறிலங்கா கடற்படையால் கைதுசெய்யப்பட்டு பலாலி முகாமிற்குகொண்டு செல்லப்பட்டேன். ஏறத்தாள 350 தமிழர்கள் கைது செய்யப்பட்டு பலாலி முகாமில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 135 பேர் மட்டுமே சிங்கள இராணுவத்தின் கொலை வெறியிலிருந்து உயிருடன் தப்பியுள்ளனர்.

குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை அவர் பத்திரிகையாளர்களுக்கு விளக்கும்போது, இந்தியாவிலிருந்து பொருட்களை ஏற்றிக்கொண்டுவந்த படகை சிறிலங்கா கடற்படையினர் வழிமறித்து அதிலிருந்த 12 பேரை கைது செய்ததாகவும் அறியப்படுகின்றது. அவர்களில் 'நானா' என்றழைக்கப்படும் முஸ்லீம் நபர் ஒருவர் போதைவஸ்துக் கடத்தல் செய்பவர். அவர் தனது உயிருக்குப் பயந்தும், விடுதலையடையும் நோக்குடனும் தன்னுடன் வந்தவர்கள் எல்லோரும் 'விடுதலைப்புலி ஆட்கள்' என்று சிறிலங்கா இராணுவத்திற்குக் கூறியதால், அவர்கள் எல்லோரின்து கண்களும் துணிகளால் கட்டப்பட்டு, எரியும் டயரில் உயிருடன் போடப்பட்டனர்.

அகஸ்ரின் தொடர்ந்து கூறுகையில், கைது செய்யப்பட்ட சிலர் மரங்களில் கட்டப்பட்டு, அவர்களின் நெஞ்சுகள் இரும்புக் கம்பியினால் பிளக்கப்பட்டு, மிகக் கொடுமையான முறையில் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவித்தார்.

அகஸ்ரின் கைதுசெய்யப்பட்டு, காரைநகர் கடற்படை முகாமில் 8 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு, பின் பலாலி இராணுவ முகாமில் 8மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டதாகவும், அங்கிருந்து கஞத்துறை முகாமில் 7 மாதங்களும் அதன் பின் பல்லேகல இராணுவ முகாமில் 4 மாதங்களும் தடுத்துவைக்கப்பட்டு, பின் விடுதலைசெய்யப்பட்டார்.

விடுதலை செய்யப்பட்ட மற்றுமொருவரான தூசைப்பிள்ளை ஜேசுதாஸ் (வயது-32) என்பவர் கூறுகையில்....
25-02-91 அன்று பருத்தித்துறையிலுள்ள முனை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கையில், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காரைநகர் கடற்படை முகாமில் கையளிக்கப்பட்டதாகவும், அங்கே தான் கடுமையாகத் தாக்கப்பட்டு, தலைகீழாகக் கட்டி தண்ணீர்த்தொட்டியில் இறக்கப்பட்டுச் சித்திரை வதை செய்யப்பட்டதாகவும் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், மார்ச் மாதம் 10ம் திகதி, தான் பலாலி இராணுவ முகாமிற்கு மாற்றப்பட்டதாகவும், அங்கே ஒருவருடம் ஆறுமாதங்கள் தடுத்துவைக்கப்பட்டு தொடர்ச்சியான துன்புறுத்தலுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாக நேர்ந்தது என்றும், அங்கே உணவு ஒழுங்காகத் தரப்படாததால் பசிக் கொடுமை தாங்காமல் அருகிலுள்ள மார்கோசா மரத்தின் இலைகளைச் சாப்பிட்டதாகவும் கூறினார்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலால் இறந்த இராணுவத்தினரின் உடல்கள் முகாமிற்குக் கொண்டுவரும் பொழுதெல்லாம், தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தாக்கப்படுவதாகவும், கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதாகவும் தெரிவித்த ஜேசுதாஸ், இதுபோன்ற சந்தர்ப்பம் ஒன்றைக் குறிப்பிடுகையில் 15 தமிழ்க் கைதிகள் ஒன்றாகச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு கண்கள் கட்டப்பட்ட நிலையில் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் கூறினார்.

81 கைதிகளுடன் ஜேசுதாஸ் பலாலி இராணுவ முகாமிலிருந்து கஞத்துறை முகாமிற்கு மாற்றப்பட்டு பின்னர் 1993 மார்ச் மாதம் பல்லேகல முகாமிற்குமாற்றப்பட்டார். இம் முகாமில் ஜே.-வி.பி சந்தேக நபர்கள் சிலரைத் தடுத்து வைத்திருந்ததாகவும், பிரேமதாசா கொலைசெய்யப்பட்ட செய்தியறிந்ததும் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்கள் என்றும் ஜேசுதாஸ் தெரிவித்தார். ■

## தீக்குளிக்கும்....

இந்நிலையில், திரு. பாஸ்கரலிங்கத்தின் நிலை கவலைக்குரியது. தனது மதிப்பிற்குரிய, விசுவாசம் மிக்க எஜமானர் இறந்துகிடந்த வேளையிலும் இறுதிக் கிரியையில் கலந்து கொள்ளாமல் சிங்கள அரசிற்கு நிதி திரட்டுவதற்காக நியூயோர்க் சென்ற ஒரு விசுவாசம் மிக்க ஊழியன் இன்று தனது புனிதத்தையும், விசுவாசத்தையும் காட்டுவதற்குத் 'தீக்குளிக்க' வேண்டிய அவல நிலையில் உள்ளார். அதாவது, சிங்கள தேசத்தின் இயக்கத்திற்கு ஓடி ஓடி பிச்சா பாத்திரம் ஏந்திய ஓர் 'நன்றியுள்ள பிராணி' மீது இன்று குற்றப்பத்திரம் வாசிக்கப்படுகின்றது. இதற்கு ஒரே ஒரு காரணம் பாஸ்கரலிங்கம் தமிழர் என்பதே. ஆனால், அரச விசுவாசத்திலும் அற்ப சலுகையிலும் ஊறிப்போயுள்ள பாஸ்கரலிங்கமும், இவரைப் போன்ற 'கடமை வீரர்களும்' சிலவேளை இதனைப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். அல்லது புரிந்து கொண்டும் ஏற்கமறுக்கலாம். ஆனால், யதார்த்தம் இதுவே. அதாவது தமிழன் என்பதை அவர் மறக்க தயாராக இருக்கலாம். ஆனால், சிங்களப் பேரினவாதம் மறக்கத் தயாராக இல்லை என்பதே அது. ■

# வவுனியா ஈச்சங்குளத்தில் மாவீரர் நினைவு கூரல்

பூவரசங்குளம், வவுனியா நகர் ஆகிய வட்டங்களில், ஏழாம் மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான மாபெரும் அஞ்சலிக்கூட்டம் ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அருகாமையில் அமைந்திருந்த மைதானத்தில் கடந்த 29ம் திகதி இடம்பெற்றது.

அம்மாதத்தில் வீரச்சாவடைந்த 29 மாவீரர்களையும் நினைவு கூர்ந்து வவுனியாக் கோட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் ஈழவண்ணன் ஈகைச்சுடரை ஏற்றி வைத்தார். பின் இம் மாவீரர்களின் பெற்றோர் ஈகைச்சுடரை ஏற்றி வைத்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு வட்டப்பொறுப்பாளர் வேணுகாந் தலைமை தாங்கினார். தொடர்ந்து நீகன், வேணுகாந், மகளிர் அமைப்பின் சார்பில் தமிழ்க்கவி ஆகியோர் உரை நிகழ்த்தினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. ■

# பல்கலை செலவினங்களுக்கு நிதி வழங்குதல் நிறுத்தம்

## திறைசேரி அறிவிப்பு

பல்கலைக் கழகங்களது மேலதிக செலவீனங்களை நிறுத்தி வைக்கும்படி, சகல பல்கலைக் கழகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொழும்பு திறைசேரியில் இருந்து பல்கலக் கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மூலம் இவ்வறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

திறைசேரியில் பணம் இல்லை என்ற காரணத்தைக் காட்டியே இவ்வாறு பல்கலைக் கழகங்களின் மேலதிக செலவினங்களை நிறுத்தும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. சகல பல்கலைக் கழகங்களுக்கும் தேவையான நிதியை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு ஒதுக்கீடு செய்துள்ள போதிலும், பல்கலைக் கழகங்களுக்கு வேண்டிய நிதியை திறைசேரி வழங்காமல் இருப்பதனால் பல்கலைக் கழகங்களின் செயற்பாடுகள் பல பாதிப்படையும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

பல்கலைக் கழக ஊழியர்களது சம்பளக் கொடுப்பனவுகளுக்கு மட்டுமே பணம் தரமுடியும் என்றும், ஏனைய செலவினங்களை நிறுத்திக்கொள்ளும்படியும் திறைசேரியினால் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் கூறப்பட்டிருக்கிறது. இச்சுற்று நிருபம் யாழ் பல்கலைக் கழகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ■

# புலிகளுக்கு எதிரான போர் யுக்தி இராணுவ உயர்பீடத்தில் குழப்பம்

சிறீலங்கா இராணுவம் தன்வசம் இருக்கும் நிலப்பகுதியை பாதுகாப்பாக தக்க வைத்துக்கொண்டு புலிகளை எதிர்த்து பெரியளவில் தாக்குதல் நடத்த போதுமான ஆட்பலம் சிறீலங்கா இராணுவத்தில் இல்லை. இவற்றில் எது முக்கியம் என்ற பிரச்சினையும் உண்டு. உள்ளதைத் தக்க வைத்துக்கொள்வதா? எதிர்த் தாக்குதல் நடத்துவதா? எதற்கு முன்னுரிமை அளிப்பது? இதுவே சிறீலங்கா இராணுவத்தின் இன்றைய நிலை. இவ்வாறு பி.பி.சி.யின் முன்னாள் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ் மொறிஸ் இலங்கையின் போரில் நெருக்கடி என்ற தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி விஜயதுங்க போர் விடயம் தொடர்பாக புதிய எண்ணத்தையோ, போக்கையோ கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. எனவே இராணுவமும் வேதனைமிக்க பழைய பாதையில் இழுபறியாகச் செல்லும் என்றே தெரிகிறது.

மேற்கண்ட விவகாரம் தொடர்பாக இராணுவ உயர் மட்டத்திலேயே பிளவு காணப்படுகிறது. இத்தகைய காரணத்தால் அரசபடையின் உள உறுதி குலைந்துள்ளது.

இந்த வகையில் புலிகள் தரப்பு நிலைமை பரவாயில்லை. விடுதலைப் புலிகள் எப்போதும் ஒரு நீண்ட காலப் போர் பற்றியே பேசி வந்துள்ளனர். தாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை சிறீலங்கா அரசு வழங்கும் என்ற நம்பிக்கையை புலிகள் இழந்து விட்டனர் போலுள்ளது.

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன மூத்த அதிகாரிகளைப் புறக்கணித்து தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு வழங்கினார் என்றும் இதனால் உயர் மட்டத்தில் பலர் கவலையடைந்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது என கிறிஸ் மொறிஸ் தனது குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார். ■

# கட்சி நடவடிக்கையை விட்டு யுத்தத்தில் ஈடுபடுக

## - பௌத்த பிக்கு ஆலோசனை

"இந்த நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் தமது நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்திவிட்டு யுத்தத்தில் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்" என்று மாத்தறை சீவாலங்கார தேரர் கூறியுள்ளார்.

தற்போது கோட்டை ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் சீலாலங்கார தேரர் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:-கட்சிப்பணம், கோயில்கள், பள்ளிவாசல்கள், பௌத்த ஆலயங்கள் என்பவற்றிடம் உள்ள பணம் யாவற்றையும் யுத்தத்திற்குத் தேவையானவற்றைக் கொள்வனவு செய்யப் பயன்படுத்த வேண்டும்.

எல்லோரும் ஐக்கியப்பட்டு, புலி என்னும் எதிரியை ஒழித்துக் கட்ட வேண்டும். அதன் பின்னர் இந்த நாட்டில் வாழும் அனைவரும் ஒன்றிணைந்து போட்டியிட்டு ஒரு தலைவரைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு, வட மத்திய மாகாணங்கள் இன்று முற்றாக யுத்தத்தால் அழிந்த வண்ணம் உள்ளன. இரவு பகலாக வெடிச் சத்தங்கள் ஒலிக்கின்றன: இறந்த சடலங்கள் ஆங்காங்கே குவிந்து கிடக்கின்றன. இலங்கையை மீட்பதற்கென உருவாகியுள்ள அமைப்புக்கள் ஏராளம். இவை பெயரளவில்தான் இயங்குகின்றன. யுத்த களத்திலிருந்து நாம் எப்படி மீள முடியும் என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். ■

# மட்டக்குளியில் தமிழ் இளைஞரின் சடலம்

கொழும்புப் பகுதிகளில் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் மீண்டும் அதிகளவில் கைது செய்யப்பட்டு வருகின்றனர். கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் மட்டும் பம்பலப்பிட்டி, வெள்ளவத்தைப் பகுதிகளில் நாற்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் சிறீலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு உள்ளனர். இதேவேளை, இத்தினங்களில் கைது செய்யப்பட்டதாகக் கருதப்படும் தமிழ் இளைஞர் ஒருவரது சடலம் மட்டக்குளியில் ரயர் போட்டு எரிக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இவரது பெயர் ரவீந்திரன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது சடலத்துக்கு அருகே, இவர் புலி உறுப்பினர் எனவும் பிரேமதாசாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் எனவும் சிங்களத்தில் எழுதப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்று இருந்துள்ளது. ■

# இருளிலிருந்து வெளிச்சத்திற்கு

எமது நாட்டில் ஆண்களை விடப்பெண்களே அதிகளவில் உள்ளனர். ஆனால், எந்த ஒரு துறையை எடுத்துப்பார்த்தாலும் பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. எமது தாய்மண்ணை மீட்பதற்காக நாம் நடத்தும் விடுதலைப் போராட்டம் பெரு வளர்ச்சி கண்டுள்ள இந்தக் காலகட்டத்திலேகூடப் பெண்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் புரிந்துகொள்ளத் தெரியாதவர்களாகவே பலர் உள்ளனர். பெண்கள் வீடுகளுக்குள்ளே இன்னமும் அடக்கப்பட்டுக்கொண்டேயிருக்கின்றனர். தமது பெண் பிள்ளைகளிடத்தில் திறமை இருப்பது தெரிந்தாலும் பல பெற்றோர், அவர்கள் அதை வெளிக்காட்டுவதற்கு அனுமதிப்பதில்லை.

இதைவிடப் பொது இடங்களில் விளையாடுவதற்கோ, சுவர்களிலும் மரங்களிலும் ஏறுவதற்கோ எந்தப் பெற்றோருமே தமது பெண்களை அனுமதிக்க விரும்புவதுமில்லை. சமூகத்தின் அவதூறுகளுக்குப் பயந்துதான் அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். இதே வேளையில் பெண் பிள்ளைகளுக்கு மனதில் விருப்பம் இருந்தாலும் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து பழக்கப்பட்டுவிட்டதால் எதுவுமே செய்யமுடியாத நிலையில் இருந்து தவிக்கிறார்கள்.

இப்படியான காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஒரு பெண், அதுவும் ஒரு குழந்தைக்குத் தாயான முப்பத்துநான்கு வயது நிரம்பிய மனோரஞ்சித மணி என்பவர் அண்மையில் முல்லைத்தீவு -மல்லாவியில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடாத்திய பனை மரம் ஏறும் போட்டியில் நான்கு ஆண்களுடன் போட்டியிட்டு, இருபத்தேழு (27) வினாடிகளில் ஐம்பது (50) அடிகள் உயரம் கொண்ட பனையில் ஏறி, இறங்கினார்.

மரமேறுவதற்காக பல பெண்கள் வந்திருந்தாலும், அவர்கள் மரத்தின் உயரத்தைப் பார்த்துவிட்டுப் பின் வாங்கிவிட்டார்கள். ஆனால் இவர், மரத்தின் உயரத்தைக் கண்டோ, ஏறத்தாழப் பத்



தொன்பது (19) தொடக்கம் இருபத்தொரு (21) வினாடிக்குள் அந்தப் பனையிலே ஏறி, இறங்கிய ஆண்களைக் கண்டோ அஞ்சாமல், தளராமல் தன் முயற்சியில் முனைந்து இறங்கினார். இருபத்தேழு செக்கன்களுக்குள் ஏறி, -இறங்கினார்.

இதைவிடத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் கிளிநொச்சியில் நடாத்தப்பட்ட பெண்களுக்கிடையிலான நிலம் கொத்துதல் போட்டியில் முதல் இடத்தைப் பெற்றார்.

துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இப்போது யோகபுரம் -மல்லாவியில் வசிக்கின்றார். இவர் தனது எட்டாவது வயதிலிருந்து தன் வீட்டிலிருந்த தென்னையில் ஏறித் தேங்காய் பிடுங்குவார். தன்னுடைய அண்ணன் ஏறுவதைப் பார்த்துத் தானும் ஏறப் பழகினார். பாடசாலைகளிலும் வேறு இடங்களிலும் நடாத்தப்பட்ட, ஓட்டம், சைக்கிளோட்டம், பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் முதலிடம் பெற்றிருக்கிறார். அத்துடன் ஐந்து வருடங்களாக இவர் ஒரு தையல் ஆசிரியராகவும் பணியாற்றுகிறார். இவரை நாம் சந்தித்தபோது,

"என்ரை மகளும் இப்படியான விளையாட்டுக்களில் முன்னுக்கு நிக்கவேணும். அவள் மரமேறி முதல் பரிசு வேண்டுகிறவரைக்கும் நான் மரமேறுவதை விடப்போறதில்லை. என்னைப் போல இஞ்சயிருக்கிற எல்லாப் பொம்பிளையளாலையுமே மரமேற முடியும். அவை நினைத்தால் பொம்பிளையளின்ரை பெயரை ஒரு புகழ் இடத்துக்குக் கொண்டுவரலாம்" என்றார்.

"திருமணத்துக்குப் பிறகு உங்கடை கணவர் ஒண்டும் சொல்லேல்லையோ?"

"நான் கலியாணம் செய்த பன்னிரண்டு வருசத்தில மரம் ஏறினது எண்டால் இதுதான் முதல் தரம். சைக்கிள் ஓடுறதையும் பந்து விளையாடுகிறதையும் பற்றி அவர் ஒண்டும் சொல்லுறதில்லை. ஆனா அவர் இல்லாத நேரத்திலதான் நான் மரமேறினனான். அதுக்கு அவர் 'நீ போய் இனி மரமேறிக் கள்ளுச் சீவு' எண்டார். பிறகு இதைப் பற்றி ஒண்டும் கதைக்கிறது கிடையாது".

"நீங்கள் மரமேறியதைப் பற்றி உங்கட மகள் என்ன சொல்றா?"

"தன்னை மற்றப்பிள்ளையள் எல்லாரும் ஒருமாதிரிப்பாக்கினமாம். இந்தப் பிள்ளையின்ர அம்மா தான் மரம் ஏறினவ எண்டு எல்லாரும் கதைக்கிறாங்களாம். தனக்கு வெட்கமாக இருக்குது என்கிறாள்".

"உங்கடை மகளுக்கு மரமேறத் தெரியுமோ?"

"எனக்குப் பன்னிரண்டு வயதுள்ள ஒரே ஒரு மகள்தான் இருக்கிறா. அவளுக்கு எல்லாமே தெரிஞ்சிருக்க வேணும் எண்டதாலை இப்பவே அவளுக்கு மரத்தில ஏறப்பழக்கிக் கொண்டிருக்கிறன். என்ரை மகள் என்னை விடக் கெட்டிக்காரியா வரவேணும். இப்பகூட அவள் கிடுகு பின்னிற போட்டியில கலந்துகொண்டவள்."

"நீங்கள் மரமேறினதைப் பற்றி மக்கள் என்ன கதைக்கினம்?"

"இவளும் ஒரு பொம்பிளையா? மனுசன் விட்டுட்டு வேலைக்குப் போக இவ மரமேறுறா. வெட்கமில்லாதவள். இந்தப் பெரிய பிள்ளை இருக்கிற வீட்டில சும்மா இருக்க ஏலாதுபோல, எண்டு நையாண்டி பண்ணுகினம். என்ர குடும்பமும் எனக்குச் சரியான எதிர்ப்பு. என்னோட கதைக்கிறதுமில்லை. என்னட்டை வாறதுமில்லை."

"அதாலை உங்களுக்குக் கவலை எண்டு ஏதாவது....?"



"அப்படி ஒரு கவலையுமில்லை. நான் கலியாணஞ் செய்தாப்பிறகு என்ரை கணவர் என்னை அடக்கி வைக்கிறதுமில்லை. நான் சரியாத்தானே நடக்கிறன். பிறகென்ன கவலை?"

நெஞ்சை நிமிர்த்தியவாறு எமக்குப் பதில் சொன்னார். இந்த மண் ஒரு புரட்சிக்குத் தயாராய் மாறுகிறது. அத்தோடு கூடவே பெண்களும்..... ■

- உதயா

நன்றி:

'சுதந்திரப் பறவைகள்'

---

## நோர்வே கிளை (T.R.O.) யின் உதவியுடன்

# கோப்பாய் போசாக்கு புனர்வாழ்வு நிலையம்

போசாக்கின்மையால் பாதிக்கப் பட்ட, கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சுமார் 1200 குழந்தைகளைப் பாதுகாக்கும் பணியை தமிழர் புனர்வாழ்வுக் கழக நோர்வேக் கிளை பொறுப்பேற்றுள்ளது. போசாக்குப் புனர்வாழ்வு நிலையம் எனப்படும் இத்திட்டம் 01. 04. 1993 தொடக்கம் தமிழர் புனர்வாழ்வுக் கழக நோர்வேக் கிளையின் உதவியுடன் இயங்கத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் வருடாந்தச் செலவு ஏறக்குறைய 2.5 மில்லியன் ரூபாய்களாகும். எமது எதிர்காலச் சந்ததியை சாவிலிருந்து காப்பாற்றும் இந்த உயர்ந்த பணிக்கு நோர்வே தமிழ்மக்களும், தமிழ்ச்சங்கங்களும் பெருமளவு ஒத்துழைப்பு வழங்கிவருகின்றன.

எமது மண்ணின் மீதான பொருளாதாரத் தடைகள் எமது மக்களின் வாழ்க்கைத்தரத்தை மோசமாகப் பாதித்து வருகின்றன. உணவுப் பொருட்கள், மருந்துகள், திரிபோசா, குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கான தடுப்பு ஊசிகள் என்பவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் அண்மைக்காலத்தில் இதனை மேலும் மோசமடையச் செய்துள்ளன.

கிராமங்களில் உழைக்கின்ற ஆண்களை இழந்துள்ள அல்லது தொழில் இழந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளே போசாக்கின்மையால் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வறிய குடும்பச் சூழலும், நிரந்தரமற்ற தொழில் வாய்ப்புக்களும் ஊட்டச்சத்துடைய பூரண உணவை தமது குழந்தைகட்கு வழங்கமுடியாத நிலைக்கு இவர்களைத் தள்ளியுள்ளது. யாழ். மாவட்டத்தில் மட்டும் அடுத்த ஓராண்டுக்குள் சுமார் 3000 குழந்தைகள் இறந்துவிடக் கூடிய நிலையில் உள்ளனர் என்ற யாழ். பல்கலைக் கழக, சமூக மருத்துவ பீடத்தின் அபாய அறிவிப்பைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இதில் கூடிய கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முக்கிய இலக்கு அடுத்த ஓராண்டுக்குள் இறந்துவிடக்கூடிய நிலையிலுள்ள குழந்தைகளை வாழ வைப்பதேயாகும்.........

எமது மக்களின் நிலை, போசாக்கு நிலையின் அந்தத்திற்குச் செல்லவில்லை என்றபோதும் கூட இன்று ஏற்பட்டுள்ள பாதிப்பு அடுத்த நூறு ஆண்டுகளுக்கு எமது சமூகத்தை எவ்வளவு தூரம் பாதிக்கப்போகின்றது என்பதை இங்குள்ள தாய் சேய் நல வைத்திய அதிகாரிகளும், யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவபீட




நிபுணர்களும் தகுந்த ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக பிறக்கின்ற குழந்தைகள் அடுத்துவருகின்ற 5 வருடங்களில் போசாக்கு நிலையில் பாதிக்கப்படும்போது அவர்களது மூளை வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றது.

காலங்காலமாக எமது தமிழ்ச் சமூகத்தின் அழிக்கமுடியாத நிரந்தரச் சொத்தாக இருந்த மூளைவளம், இன்று சிங்கள அரசு விதித்துள்ள பொருளாதாரத்தடையினால் கேள்விக்குறியாகும் நிலை தோன்றியுள்ளது. எவ்வளவுதான் மாணவர் கல்வியில் தடைகள் விதித்தும் அழிக்கமுடியாது போன அந்த கல்வி அறிவை, எமது குழந்தைகளை மூளைவளர்ச்சி அற்றவர்களாக்கிவிடுவதன் மூலம் அழித்துவிட சிறீலங்கா அரசு முனைகின்றது. துப்பாக்கிகளாலும் குண்டுகளாலும் ஏற்பட்ட அழிவுகளை விட இதுபலமடங்கு பேரழிவை எமது எதிர்கால சந்ததிக்கு ஏற்படுத்தும் மறைமுகமான இனப்படுகொலையாகும்.

இந்நிலை ஏற்படுவதைத் தடுக்கும் நோக்குடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தோறும் போசாக்குப் புனர்வாழ்வு நிலையங்களை அமைத்து பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வைத்திய உதவிகள் மற்றும் போசாக்கு உணவுகளை வழங்கி வருகின்றது. இக் குழந்தைகளின் பெற்றோருடைய குடும்ப நிலை, தொழில் வருமானம் கவனத்தில் எடுக்கப்பட்டு தேவைப்படின் நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. தவிர தொழில் செய்யக் கூடியவர்களுக்கு தேவைப்படும் கட்டங்களில் தொழில் செய்வதற்கான பணம் கடனாக வழங்கப்படுகின்றது.

இவ்வகையில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அமைக்கப்பட்டுள்ள போசாக்குப் புனர்வாழ்வு நிலையத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழக நோர்வேக் கிளை பொறுப்பேற்று உள்ளது. வருடாந்தம் சுமார் 1200 குழந்தைகள் பயன்பெற உள்ள இத்திட்டத்தின் வருடாந்தச் செலவான சுமார் 25 இலட்சம் ரூபாவைத் திரட்டும் பணியில் இக்கிளை தற்போது ஈடுபட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் தேவையை உணர்ந்தும், எமது எதிர்காலச் சந்ததியை சாவிலிருந்து காப்பாற்றவேண்டிய தமது தார்மீகப் பொறுப்பை உணர்ந்தும் நோர்வேயின் பலபகுதிகளிலுமிருக்கும் தமிழ்ச்சங்கங்களும், தமிழ்மக்களும் பெருமளவில் நிதியுதவி வழங்க முன்வந்தமை தமிழர் புனர்வாழ்வுக் கழக நோர்வேக்

தொடர்ச்சி 7ம் பக்கம் ....

# மத குருமாரின் சமாதான முயற்சிகளும் அரசாங்கத்தின் அக்கறையீனமும்

போரை நிறுத்தி, சமாதான சூழலை உருவாக்கும் முயற்சியில் அண்மைக்காலமாக, மதத் தலைவர்களைக் கொண்ட நல்லெண்ணக்குழுக்கள் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றன.

22-4-92 இல் புத்த பிக்குகளின் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்ததில் இருந்து 8-6-93 அன்று ஆசிய ஆயர்கள் மாநாட்டின் ஏற்பாட்டின் பேரில் வந்த மதத்தலைவர்கள் வரை அது தொடர்ந்துள்ளது.

இடையில் கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ, யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களுடனும் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண ஆயர் டி. - ஜே. அம்பலவாணர் அவர் களுடனும் இணைந்து சமாதான யாழ்ப்பாணம் வருகின்றன.

என்ற சிங்கள அரசின் பொய்யான கருத்தை நம்பியே இந்த நல்லெண்ண குழுக்கள் புலிகள் இயக்கத்தை சமாதான வழிக்கு வரத்தூண்டும் எண்ணத்துடன் வந்து புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடாத்திய பின்தான் சமாதான முயற்சிகளில் புலிகள் காட்டும் ஆர்வத்தையும் சமாதான சூழலை ஏற்படுத்த முன்னோடியாக என்னென்ன சமிக்ஞைகளை அரசுக்கு காட்ட வேண்டுமோ அவற்றையெல்லாம் வெளிக்காட்ட புலிகள் இயக்கம் தயாராகவே இருப்பதையும் நேரடியாகக் கண்டு கொள்கின்றனர்.

அதேவேளை புலிகளின் இந்த சாதகநிலையை பற்றிப் பிடித்துக் கொண்டு பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்துண்டிருக்கும் இந்தப் போரின் வேர்கள் எங்கே உள்ளன? இப்போரின் அடிப்படைக் காரணிகள் என்ன? இந்த அடிப்படைக் காரணிகளைத் தீர்க்காது நடைபெறும் எந்த முயற்சியும் உண்மையான சமாதானத்தைக் கொண்டு வராது; மாறாக அது தமிழ் இன அழிப்பையே ஊக்குவிக்கும் என்பதையெல்லாம் வரலாற்றை உதாரணம் காட்டி விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் எடுத்து விளக்கினார்கள்.

இந்த சமாதான நல்லெண்ணக் குழுவினர் சில மக்கள் அமைப்புக்களையும் சென்று சந்தித்து, சமாதான சூழலை உருவாக்குவதில் மக்களுக்கிருக்கும் பங்கையும் எடுத்து விளக்கினர். அதைச் செவிமடுத்த மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள், எமக்கென்றொரு தலைமை உண்டு. அதுதான் விடுதலைப்புலிகள் பேரினவாதம் எரிச்சலுடன் நோக்குகின்றது. அத்துடன் இத்தகைய நல்லெண்ணக்குழுக்கள் தங்களுடன் சிங்கள பௌத்த குருமாரையும் இணைத்துக்கொள்ளும் முயற்சியும் சரியான பயனைக் கொடுக்கவில்லை.

இதற்கு ஒரு காரணமுண்டு. தமிழர்களின் தாயகத்தை அபகரிப்பது, தமிழினத்தைச் சிதைப்பது, ஒட்டுமொத்தத்தில் இத்தீவை சிங்கள பௌத்த நாடாக மாற்றுவதுதான் சிங்கள பௌத்த மதபீடத்தின் உறுதியான நிலைப்பாடாகும்.

இந்த நோக்கத்தை சமாதான வழிமுறைகளில் அடைய முடியாது என்பதால், போர் மூலமே அதைச் சாதிக்க அது முனைகின்றது. அதனால்தான் போர்க்களங்களிலுள்ள சிங்களப்படை முகாம்களுக்குச் சென்று இராணுவத்திற்கு ஆசிகள் கூறி, யுத்தத்தில் வெல்லவேண்டும் என்று பூசைகள் வைக்கின்றனர். போரை ஆதரிக்கின்றனர்.

ஒன்று அஸ்கிரியபீடம்; மற்றையது மல்வத்த பீடம். இந்த இரண்டு பீடங்களையும் சேர்ந்த பிக்குகள் அந்த பௌத்த நல்லெண்ணத் தூதுக்குழுவில் பங்குகொள்ளவில்லை என்பதிலிருந்து அந்த பௌத்த பிக்குகளின் செயல்திறனை, செயல் அதிகாரத்தை மதிப்பிடலாம்.

07. 02. 1993 அன்று யாழ். வந்த கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோவும் இந்த சக்திமிக்க பௌத்த மதபீடங்களின் குருமாரைச் சந்தித்து அவர்களது ஆதரவுடன் சமாதானத்திற்குரிய சூழலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவேன் என்று கூறிச் சென்றார். ஆனால், கொழும்பு சென்ற ஆயருக்கு சிங்கள பௌத்த பேரினவாதிகளின் வசைமாரிதான் காத்திருந்தது. இருந்தாலும் அங்கிலிக்கன் ஆயர் அவர்கள் சமாதான சூழல் ஒன்றை ஏற்படுத்த அயராது பாடுபடுகின்றார்.



விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தச் சென்ற பௌத்த பிக்குகளைக் கொண்ட நல்லெண்ண தூதுக்குழு



விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடும் ஆயர் கெனத் பெர்னான்டோ குழுவினர்.



விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தச் சென்ற சர்வ தேச மதகுருமாரைக் கொண்ட நல்லெண்ண தூதுக்குழு

சூழல் ஒன்றை உருவாக்க முயன்றார்.

இந்த முயற்சியில் ஈடுபட்ட எந்த ஒரு பிரிவினாலும், சமாதானத்திற்கான தம் நல்லெண்ண முயற்சியை இரண்டாம் கட்டத்திற்கு நகர்த்த முடியவில்லை.

இதற்குக் காரணம் சிங்கள அரசின் ஒத்துழைப்பின்மைதான்.

இம்முயற்சிகளில் ஈடுபட்ட பல மதத்தலைவர்கள், குறிப்பாக கிறிஸ்த்தவ மதத்தலைவர்கள், இந்த உண்மை நிலையை நேரடியாகவும், மறைமுகமாகவும் உலக சமூகத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

சிங்கள தேசத்திலும் சரி, வெளிநாடுகளிலும் சரி சமாதானத்திற்குக் குறுக்கே புலிகள் இயக்கம்தான் தடைக்கல்லாக இருக்கின்றது என்ற ஒரு தவறான எண்ணப்பாடு பிரச்சாரப் படுத்தப்படுகிறது. சிங்கள அரசும், அதன் தொடர்பு சாதனங்களும் இத்தகையதொரு பொய்யையே, நடைமுறை உண்மை போல திரித்துக்கூறி வருகின்றன. புலிகள் இயக்கத்திற்கும் உலக செய்திச் சேவையினருக்கும் இடையில் நேரடித்தொடர்பு இல்லாதிருப்பதால், இந்த செய்தி மோசடியை -கருத்துத் திரிப்பை -உலகமும் உண்மை என நம்புகிறது.

"பேச்சு வார்த்தைகளுக்குத் தயாராக அரசு சமாதானக் கதவுகளைத் திறந்தே வைத்திருக்கின்றது. புலிகள் தங்கள் போரைத் தொடர்கின்றார்கள்" சமாதான சூழலை ஏற்படுத்த வேண்டும் என்ற புலிகளின் நியாயமான கோரிக்கையை சிங்கள அரசு ஏற்க மறுக்கும்போதுதான், யார் சமாதானத்தை விரும்புகின்றார்கள், யார் அதற்குத் தடைக்கல்லாக நிற்கின்றார்கள் என்ற உண்மையை, நல்லெண்ணக் குழுவினரும் புரிந்து கொள்கின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த, பிலிப்பைன்சு மற்றும் மலேசியா போன்ற நாடுகள் உள்ளிட்ட சர்வதேச நல்லெண்ணக் குழுவினர் தங்களுடன் ஒரு சமாதானத் திட்டத்திற்குரிய சிபார்சுகளையும் கொண்டுவந்திருந்தனர்.

தமிழ் மக்களை சமாதான வழிக்குத் தூண்டுவதையும், சமாதான வலயங்களை அமைப்பதையும் அத்திட்டம் சிபாரிசு செய்கின்றது.

இதற்கு புலிகளின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில், ஒரு சில சமாதான வலயங்களை அல்ல வடகிழக்கு முழுவதையும் ஒரு சமாதான வலயமாக மாற்றவே விரும்புவதாகத் தெரிவித்தனர். அத்துடன் தமிழ் மக்கள் சமாதானத்திற்குத் தயாராக - அதை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டே இருக்கின்றார்கள். இத்தகையவர்களிடம் சமாதானம் தேவை எனப் பிரச்சாரம் செய்வது அவசியமற்றது. இத்தகைய பிரச்சாரம் சிங்கள மக்கள் மத்தியில்தான் தேவையானது. அப்போதுதான் அம்முயற்சி நன்மை அளிக்கும் என்றும் புலிகளின் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர். அத்துடன், நடந்துகொண்டிருக்கும் இயக்கம். இந்த விடயங்களை அவர்களுடன் கதைப்பதுதான் நடைமுறைச்சாத்தியமானது என்றும், தங்களது கருத்தைத் தெரியப்படுத்தியிருந்தார்கள்.

இவ்விதமாக தமிழ் மக்கள் தரப்பில் தமது சந்திப்புக்களை இனிதே முடித்துக்கொண்டு சிங்கள தேசம் சென்ற இந்த நல்லெண்ணக் குழுவினருக்கு, தக்க வரவேற்புக் கிடைக்கவில்லை. சிங்கள அரசும் இக்குழுவை அசட்டை செய்தது. சிங்கள தேசத்து அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் பௌத்த மதபீடமும் இக்குழுவினரை அசட்டை செய்தது. இக்குழுவினரின் கருத்துக்களை அரசு ஏற்க வேண்டும் என்றில்லை எனக்கூறி அவர்கள் மேற்கொண்ட சமாதான முயற்சியை சிங்கள அரசின் பேச்சாளர் ஊக்கம் கெடவைத்தார். சிங்கள தேசத்தின் தரப்பிலிருந்து கிடைத்த அக்கறை இன்மையால் சமாதான முயற்சியை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்த முடியாது நல்லெண்ணக் குழு திரும்பிச் சென்றது. ஆனாலும், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு விடுதலைப்புலிகள் விடுத்த வேண்டுகோள் நியாயமானது. அதை அரசு ஏற்றுக்கொண்டால் தான் சமாதான சூழல் பிறக்கும் என்ற கருத்தை இக்குழுவில் இடம்பெற்ற ஓர் ஆயர் உலக சமூகத்திற்கு தெரியப்படுத்தினார்.

தமிழர் தாயகத்தில் சமாதான சூழலை உருவாக்க, இலங்கைத் தீவின் உள்ளேயும், வெளியேயும் இருந்து கிறித்தவ திருச்சபை மேற்கொள்ளும் நல்லெண்ண முயற்சிகளை, சிங்கள பௌத்த

22. 05. 1992 அன்று, சமாதான நல்லெண்ணத் தூதுக்குழு என்று கூறிக் கொண்டு, பௌத்த பிக்குகள் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்தது. அது போர்க்கைதிகளின் விடுதலை பற்றிப் பேசியதுடன் ஒரு தீர்வுத்திட்ட நகலையும் புலிகள் இயக்கத்திடம் கையளித்தது. அதைப் பரிசீலனை செய்த புலிகளின் தலைமை அத்தீர்வுத்திட்டத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, அது ஏற்புடையதல்ல என அக்குழுவினருக்கு விளங்கப்படுத்தியது. ஆனாலும் அவர்களின் நல்லெண்ண முயற்சியைப் பாராட்டியதுடன் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்துடன் மறுபடியும் வருகைதரும்படி விடுதலைப்புலிகள் அழைத்தனர். பௌத்தபிக்குகள் அதை ஆமோதித்து தாம் சென்று அரசுடன் பேசி ஒரு புதிய தீர்வுத்திட்டத்துடன் திரும்பவருவதாகக் கூறி . சிறீலங்கா சென்றனர். ஆனால், அந்த பௌத்த பிக்குகளின் குழு ஒரு வருடமாகியும் திரும்பி வரவில்லை. தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை பௌத்த மத துறவிகள் வரையமாட்டார்கள் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

சிங்களதேசத்தின் அரசியலை ஆட்டிப்படைக்கும் வல்லமையுடன் சிறீலங்காவில் இரண்டு மதபீடங்கள் இருக்கின்றன.

அதேபோன்றுதான், அண்மையில் வந்திருந்த சர்வதேச நல்லெண்ணத் தூதுக்குழுவினரும் இந்த மதபீடங்களின் ஆதரவை எதிர்பார்த்து, அது கை கூடாத நிலையிலேயே தமது யாழ். வருகையை மேற்கொண்டிருந்தனர்.

ஆனாலும் இந்த நல்லெண்ணக் குழுக்களின் தமிழீழ வருகை எமது விடுதலைப் போராட்டத்திற்கு பல வழிகளில் நன்மையைத் தந்துள்ளது.

தமிழரின் தேசியப்பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை. இதை அரசியல்வாதிகள் தீர்க்க முடியுமே அல்லாமல் மதகுருமார்களால் அது முடியாது. ஆனால், சிங்கள அரசியல்வாதிகள் அதற்குத் தயாராக இல்லை.

ஆட்சி அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் சமாதான முயற்சியை மேற்கொண்டு விடுதலைப்புலிகளுடன் நேரடிப்பேச்சுக்களை நடாத்தும் சூழல் ஏற்படும் போதுதான் ஒரு சமரசம் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. இதை சிங்கள தேசத்தின் பிரதான கட்சிகள் கவனத்தில் கொள்வது நன்மை அளிக்கும். ■

நன்றி:
'விடுதலைப் புலிகள்'

# யாழ் குடாநாட்டு விவசாயியும் அவனது பிரச்சினைகளும்

## ஒரு சமகால நோக்கு

யாழ் குடாநாட்டின் நிலப்பரப்பில் 38 சதவீதம் விவசாய விளைபூமியாக உள்ளது. இதில் நெற்செய்கையும், காய்கறி வகைகள் மற்றும் குரக்கன், பயறு போன்ற சிறுதானியப் பொருட்கள், காசுப்பயிர்களான புகையிலை, வெங்காயம், மிளகாய் ஆகிய பொருள்கள் அடங்கிய ஒரு விவசாய ஏற்பாடுகள் மரபு வழியாகச் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றுள் இன்று கணிசமான விளை நிலங்கள் இராணுவ நடவடிக்கைப் பிரதேசங்களுக்குள் அடங்கிய இடமாகிவிட்டன. எனினும் தென்மராட்சி, வடமராட்சி ஆகிய இடங்களில் நெற்செய்கை முழுமையாகவும் வலிகாமம் பகுதிகளில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களில் நெற்செய்கையும் காய்கறி மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கையும் இன்று இடம்பெறுகின்றன.

### விவசாயத்துக்கான உள்ளீடுகள்

உள்ளீடுகள் என்று இங்கு குறிப்பிடும்போது உரம் முதல் கிருமிநாசினி, விதைநெல், காய்கறி விதைகள், விதை உருளைக் கிழங்கு, எரிபொருள், கடன் வசதி என்பன அடங்கும்.

### உரம்

2. உரத்தைப் பொறுத்தளவில் இங்கு கமநல சேவைத் திணைக்களமே இதன்பெரும் பகுதியை கையாளுகின்றது. ஆனால், சில ஆண்டுகளில் வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர் சமாசம் உள்ளடங்கிய கூட்டுறவுச் சமாசம் பெருமுயற்சி எடுத்து உர விநியோகத்தில் ஈடுபட்டுள்ளது. போர்க்காலச் சூழ்நிலை ஆரம்பமாகுமுன்பு கொழும்பிலிருந்து உரம் மிகச் சுலபமாகக் கொண்டு வரப்பட்டது.

கமநலசேவைத் திணைக்களத்தினால் விடுவிக்கப்படுகின்ற சில சுற்றறிக்கைகளினாலும் விநியோகம், விலை நிர்ணயம் போன்ற விடயங்களிலும் இன்றும் சில தெளிவற்ற நிலைதான் காணப்படுகின்றன.

கமநலச் சேவை திணைக்களம், கூட்டுறவுச் சமாசம் இருபகுதியினரும் கடல்மார்க்கமாக கொண்டு வந்து, கமநல சேவைகள் நிலையங்களில் ஊடாகவும் கூட்டுறவுக் கிளைகள் மூலமாகவும் (முறையே) விநியோகம் செய்யப்படுகிறது. ஆனால் இதில் விவசாயிகளுக்கு மிகத் தேவைப்படுகின்ற யூரியா இங்கு கொண்டுவர அனுமதியில்லை. அதற்கு ஈடாக அமோனியம் சல்பேட்டை மூலமாகக் கொண்ட மற்ற உரங்கள் மட்டுமே இங்கு கொண்டுவரப்படுகின்றன.

இவை விவசாயிகளுக்கு தேவை போதாமை, நேரத்துக்குக்கிடைக்காமை, அதிக விலை கொடுப்பது போன்ற சிக்கல்கள் பெரிதும் காணப்படுகின்றன.

இதற்கிடையில் இவ்வளவு இடர்களுக்கு மத்தியில் கொண்டுவரப்படும் உரவகைகள் சில சந்தர்ப்பங்களில் தனியார் விற்பனைத் துறைக்கும் மறைமுகமாகச் சென்று விவசாயிகள் தேவையானபோது கூடுதல் விலை கொடுத்து கொள்வனவு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

3. திணைக்களமோ, அல்லது கூட்டுறவுச் சமாசமோ உரத்தை இங்கு தருவித்தாலும் அவற்றை விற்பனை செய்யும்போது சமனான விலை நிர்ணயம்இதுவரை செய்யப்படவில்லை. கொழும்பில் உத்தியோகத்தருக்கான கொடுப்பனவு, முதலுக்கான வட்டி கப்பலால் கொண்டு வருவது முதல், பாஜ் கூலி, ஏற்றி இறக்கும் கூலி, லொறிக்கூலி, தரகு இலாபம் என்று கமநல சேவை நிலையம் அல்லது கூட்டுறவுக் கிளை போன்ற விற்பனை நிலையங்களை அடையும்வரை செலவீனங்கள் கணிக்கப்பட்டு இறுதியில் கொழும்பு விலையிலும் பார்க்க ஒரு மூடை உரம் இருமடங்கு விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

கமநல சேவைத் திணைக்களத்தைப் பொறுத்தவரை அவை ஒரு விற்பனை அமைப்பு அல்ல. ஆனால், கூட்டுறவுத்துறையோ தங்களது பணி ஒரு இலாப நோக்குடன் விற்பனை நோக்கத்தோடு கலந்த பணி என்று கருத வாய்ப்புண்டு.

மேற் செலவீனங்கள் எனக்கூறி பல நிலைகளிலும் கூட்டிப் பெருக்கி ஒரு சாக்கு உரம் இன்னவிலை என்று நிர்ணயம் செய்யப்படுகின்றது. இதில் உத்தியோகத்தர்களது போக்குவரத்துச் செலவு என்பன கூட அடங்கும். ஆனால் விலை நிர்ணயத்தைப் பொறுத்தவரை விவசாயி ஒவ்வொருவரதும், விலை நிர்ணயத்தில் ஒவ்வொரு நிலையிலும் ஏற்படும் செலவீனங்களை அறிய வாய்ப்பு அளிக்க வேண்டும். இன்று வரை இந்த விடயம் சாதாரண ஒரு விவசாயியைப் பொறுத்தவரை பெரிய ஒரு மூடு மந்திரமாகவே உள்ளது. இந்நிலை நிச்சயம் மாறவேண்டும்.

4. முன்பு ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கும், உரக்கூட்டுத்தாபனம் நிபந்தனையின் பேரில் இரண்டு இலட்சம் ரூபா கடன் உச்ச வரம்பு விதித்து உரக்கொள்வனவுக்கு கடன் வசதி அளித்தனர். இப்பொழுது அந்நிலை ரத்துச் செய்யப்பட்டு விட்டது எனக் கூறப்படுகின்றது. மீண்டும் பழையபடி இந்தச் சலுகையை சகல கூட்டுறவுச் சங்கங்களும் பெற அரச அதிபர் மட்டத்தில் முயற்சி செய்து வெற்றி பெற்றால், உரம் விநியோகிக்கும் விடயத்தில் எவருக்கும் ஏகபோக உரிமை என்பது இல்லாதொழியும்.

கல்யாணி

### விதை நெல்லு

யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை சாதாரண விவசாயி கூட தனது விளைச்சலில் தரமான நெல்லை விதை நெல்லாகச் சேர்த்து வைக்கும் வழக்கமுடையவனாகக் காணப்படுகின்றான். ஆகவே கமநல சேவை திணைக்களமோ, விவசாய இலாகாவோ பெரும் சிரமம் எடுத்து இங்கு கொண்டு வரும் விதை நெல்லு சில சமயங்களில் விற்பனையாகாமல் களஞ்சியங்களில் தேங்கியிருப்பது வழமையாகிவிட்டது. ஆனால், 1992 இல் இரண்டாம் கால மழை பொய்த்ததால் கூடுதல் நெல்லையோ, தரமான விதைத்திறன் கொண்ட நெல்லையோ விவசாயிகள் பெறமுடியாமல் போய்விட்டது.

5. ஆகவே பொறுப்பு வாய்ந்த திணைக்கள அதிகாரிகள் உரிய நேரத்தில் விதைக்கத்தக்கதாய் விதை நெல்லை இங்கு கொண்டுவர முயற்சி எடுக்க வேண்டும். சென்ற ஆண்டு கிளிநொச்சியில் விளைந்த நெல்லில் தரமான விதை நெல்லை, ஆராய்ச்சி அதிகாரிகள் தரம் கண்டு சிபார்சு செய்வார்களானால் உடன் அந்த நெல்லை விவசாய இலாகா இங்கு கொண்டு வரமுடியும்.

கூட்டுறவுத்துறையும் தம்மாலான விதத்தில் விதை நெல்லை, பத்தலகொட என்னும் இடத்தில் அதிகாரிகளின் சிபார்சு மூலம் பெற்று கடல் மார்க்கமாக இங்கு கொண்டுவர இருப்பதாக அறியமுடிகின்றது.

நாங்கள் இப்பொழுது வாழும் முறை, அனுபவிக்கும் கஸ்டங்கள் எல்லாம் புதிதல்ல. யதார்த்த நிலையில் நின்று விவசாயத்துறையோடு ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இந்த மண்ணின் இதய நாடிகளாக உள்ள விவசாயிகளின் பிரச்சினையைச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய காலமிது. அரசாங்க 'சிவப்பு நாடா' முறையில் வைத்த நம்பிக்கையையும் பக்தியையும் நிச்சயமாக தம் மனதில் இருந்து அகற்றிவிட்டு சூழ்நிலைக்கு ஏற்பசெயற்பட வேண்டிய காலமிது.

6. யாழ் குடா நாட்டில் இயங்கும் சகல அரச சார்பற்ற நிறுவனங்களின் பணி தற்போதைய சூழ்நிலையில் மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். இந்த அமைப்பு கடந்த வருடங்களில் விவசாயத் துறையில் பெரும் சேவையாற்றி வருகின்றது.

குறிப்பாக 1992 ஆம் ஆண்டு சிறு தானியச் செய்கையைப் பொறுத்தளவில் குரக்கன் செய்கை பண்ணப்பட்டு விவசாயிகளிடமிருந்து இரண்டு இலட்சம் கிலோ, கிலோ ஒன்றுக்கு 26 ரூபா செலுத்தி யாழ் வர்த்தக திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்டது. சமயத்தில் கைகொடுத்த அரச சார்பற்ற நிறுவனங்கள் புனர்வாழ்வு செயலக அதிகாரிகள் ஒழுங்கு அமைத்து செய்த சேவை, விவசாயிகள் மத்தியில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

1993 ஆம் ஆண்டும் இதே ஊக்குவிப்பை அவர்கள் விவசாயிகளுக்கு அளிப்பார்கள் என விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்ப்பது வியப்பல்ல.

### எரிபொருள்

7. 1990 யூன் மாதம் முதல் மண்ணெண்ணெய் இன்றுவரை கிடைத்தற்கரிய பொருளாகவே உள்ளது. 1993 மார்ச் மாதம் யாழ் குடா நாட்டுக்கு மாதம் 50-00 பரல் மண்ணெண்ணெய் இங்கு அனுப்பப்படும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பு இதுவரை முழுமையாகச் செயற்படுத்தப்படவில்லை.

அவ்வாறு முறையாக 5000 பரல் மண்ணெண்ணெய் நிச்சயமாக இங்கு வருகின்ற சாத்தியமுண்டாயின் விவசாய இலாகா பிரிவுச் செயலர்கள் தத்தமது கிராமிய மட்ட உத்தியோகத்தர்கள் உதவியின்படி உண்மையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோரை இனம் கண்டு பட்டியல் தயாரித்து ஒவ்வொரு மாதமும் எவ்வளவு எரிபொருள் தேவை என ஒரு நிச்சயமான அறிக்கையைத் தயாரித்து புனர்வாழ்வுப் பகுதியின் அதிகாரிகளுடன் இணைந்து விநியோகத் திட்டத்தைச் சீராக்க வேண்டும்.

இவ்வாறான ஒழுங்கான திட்டமிருப்பின் ஓரளவுக்குத் தன்னும் விவசாயிகளுக்கு ஒழுங்காக உதவ முடியும்.

### உருளைக் கிழங்கு

8. பல ஆண்டுகளுக்கு முன்பு யாழ் குடா நாட்டு விவசாயிகளுக்கு வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட விதை உருளைக் கிழங்கு வழங்கப்பட்டது. கால நிலையும் சீராக இருந்து எரிபொருளும் உரவளங்களும் சமயத்துக்கு ஏற்ற மாதிரி வழங்கப்பட்டதால் எதிர்பாராத விதத்தில் நல்ல விளைச்சல் காணப்பட்டது. ஆரம்பத்தில் அக்கறை காட்டாத பலர் பின் அக்கறையுடன் செயற்பட்டனர். ஆனால் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கைப் பயிரிட்டால் மண்ணின் நல்ல தன்மை குறைந்துவிடும் என்றும் விதை உருளைக் கிழங்குகளுக்கு அடிக்கப்பட்ட மருந்து வகைகளே காரணம் எனப் பரவலாகக் கதையடிபட்டது. இம்முறை இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கு வழங்கப்படமாட்டாது எனவும் விதை உருளைக் கிழங்கை இங்கு பயிரிட்டு அவற்றிலிருந்து பெறப்பட்ட விதை உருளைக் கிழங்குதான் யாழ் குடா நாட்டுக்கு அனுப்பப்படும் என விவசாய இலாகா இங்கு அறிவித்துள்ளது. இது தொடர்பாக சென்ற ஆண்டு விவசாயிகள் மனதில் ஏற்பட்ட சந்தேகங்களைப் போக்க விவசாய விரிவாக்கப் பகுதியோ அல்லது விவசாய ஆராய்ச்சிப் பகுதியோ எந்த ஒரு முயற்சியையும் எடுக்கவில்லை.





இவற்றை விட சென்ற ஆண்டு எவ்வளவு நிலப்பரப்பில் எத்தனை விவசாயிகள் உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட்டனர். அவர்களின் விளைச்சலின் சராசரி என்ன, என்ற விடயங்களை பொதுமக்கள் அறியத்தக்கதாய் விவசாய இலாகா ஒரு அறிக்கையை வெளியிட வேண்டும். இப்பாழுது இல்லாவிடினும் எதிர்காலத் திட்டங்களை தயாரிக்க ஒரு பெரிய உதவியாக அமையும்.

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழ் வீடியோ திரைப்படங்களும்

**- பாபு அரியாலை**

**மின்சாரமோ, தொழில்நுட்ப வசதிகளோ எதுவும் இல்லாத நிலையிலும், தமிழீழ மக்களின் போராட்ட உணர்வுகளை வெளிப்படுத்தும் வீடியோத் திரைப்படங்கள் தமிழீழத்தில் தயாரிக்கப் பட்டு வருகின்றன. இத்திரைப்படங்கள் தமிழீழக் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர உதவுவதுடன், மக்களின் போராட்ட உணர்வுகளை மேலும் வளர்க்கவும் உதவுகின்றன.**

**புலம் பெயர்ந்து வாழும் நம் மக்களிடையேயும் இவ்வீடியோத் திரைப்படங்கள் பெரும் வரவேற்பைப் பெறத் தொடங்கியுள்ளன. திரைப்படங்கள் வெளிப்படுத்தும், தாய் மண்ணின் போராட்ட நிகழ்வுகளும், மக்களின் உறுதியான போராட்ட பங்களிப்பும், புலம் பெயர்ந்து வாழும் மக்களிடையே புத்துணர்ச்சியையும் புதுத்தென்பையும் ஏற்படுத்தி வருகின்றன. இந்த வகையில் அண்மையில் இலண்டனில் அரங்கு நிறைந்த காட்சியாகக் காண்பிக்கப்பட்ட, 'தமிழோசை' வீடியோத் திரைப்படம் எம்மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.**

தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற ஆரம்ப காலகட்டங்களில், அதாவது 1986 -1987 காலப்பகுதிகள் வரை போராட்ட வடிவங்களும், விளக்கங்களும், மக்களுடே செலுத்தப் படுவதற்கும், மக்களை போராட்டத்துடன் இணைத்துக் கொள்வதற்கும், கருத்தரங்குகள், வீதியோர நாடகங்கள் (தெருக் கூத்து) நாடகங்கள் போன்ற ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன. காலப்போக்கில் மக்கள் தென்னிந்திய ஒளிப்பதிவு படங்கள் மீது அதிக நாட்டம் கொள்ள ஆரம்பித்தனர். இந்த நிலையில் எமது போராட்ட சிந்தனைகளை மக்கள் மனதில் பதிய வைப்பதற்கு நாமும் அவ்வகையான ஒரு ஊடகத்தை அதாவது ஒளிப்பதிவு படம் என்ற ஊடகத்தை பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இதன் ஆரம்ப கட்டமாக அரியாலைப் பிரதேசத்தில் முதன் முதலாக ஒரு போராட்ட சிந்தனையூட்டமுடைய ஒரு திரைப் படம் தயாரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. யாழ். நகரில் கோட்டை -நாவற்குழி -பருத்தித்துறை -தொண்டமானாறு -பலாலி என சூழவர சிங்களப் படை முகாம்கள் இருந்த வேளையில் அரியாலையைச் சேர்ந்த திரு. என். கேசவராயா என்பவர் இந்த வேலையை ஆரம்பித்தார். அந்த நேரத்தில் கலை -கலாச்சார அவையோ, கலை -பண்பாட்டுக் கழகமோ ஆரம்பிக்கப்படவில்லை இதனால் 'தமிழர் கலாச்சார வட்டம்' என்ற பெயரில் ஒரு கலை அமைப்பை உருவாக்கி ஒளிப்பதிவு படங்கள் தயாரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வகையில் முதலாவது திரைப்படம் விடுதலைப் புலிகளின் தாரகமந்திரமான "தாயகமே தாகம்" என்ற பெயரில் தமிழீழத்தில் போராட்டத்தை மையமாகக் கொண்டு வெளியிடப்பட்டது. 1986 ஆம் ஆண்டு வைத்தீஸ்வராச் சந்தியில் அமைந்திருந்த "எம்பயர் ஸ்கோப்" என்ற சிறிய திரை அரங்கில் 'தாயகமே தாகம்' என்ற முதல் வீடியோ திரைப்படம் வெளியிடப்பட்டு அறிமுகப் படுத்தப்பட்டது. திரு. செம்பியன் செல்வன் அவர்கள் அப்படத்தின் மதிப்பீட்டு உரையை நிகழ்த்தினார். தொடர்ந்து யாழ். நகரின் பல மினித்திரை அரங்குகளிலும் நான்கு அடி அகலத் திரையில் இப்படம் அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடியது. அரியாலையைச் சேர்ந்த பல முன்னணிக் கலைஞர்கள் நடித்திருந்தனர்.

இதுபோல, 1987 இல் தமிழர் கலாச்சார வட்டத்தினரின் 2 ஆவது வீடியோ படமான 'மரணம் வாழ்வின் முடிவல்ல' என்ற திரைப்படம் வெளியிடப்பட்டது. இது 03. 05. 1987 அன்று ராஜா மினித்திரை அரங்கில் வெளியிடப்பட்டது. வெளியீட்டு விழாவின் போது தமிழர் கலாச்சார வட்ட செயலாளர் டானியல் -சவுந்திரன் வரவேற்புரையையும், ஆசியுரையை கம்பன் கழக அமைப்பாளர், திரு. ஜெயராஜ் அவர்களும், சிறப்புரைகளை, அன்றைய யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வீ. கே. சிவஞானம் அவர்களும், கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களும் நிகழ்த்தினார்கள். 'தாயகமே தாகம்' படத்தின் மூலம் சொந்த நாட்டிலேயே அகதிகளாகிவரும் திருமலை மக்களின் துயரங்களையும், துன்பங்களையும் எடுத்துக்காட்டிய தமிழர் கலாச்சார வட்டத்தினர், இரண்டாவது படமான 'மரணம் வாழ்வின் முடிவல்ல' படம் மூலம் தமிழ் -முஸ்லீம் ஒற்றுமை பற்றியும் போராட்ட நிகழ்வுகள் பற்றியும், இராணுவ அடக்கு முறைகள் பற்றியும் தெளிவாக எடுத்துக் காட்டி இருந்தனர். இத்தகைய திரைப்படங்கள் இரண்டும் போராட்ட காலத்தில் மக்களுக்கு கிடைத்த பெரு வெற்றியாகும். "மரணம் வாழ்வின் முடிவல்ல" என்ற திரைப்படத்தை,

நமது மண்ணின் அவலங்களை, நமது மக்களின் அல்லல்களை ஆற்றல் மிகு கரத்தில் ஆயுதங்கள் ஏந்தி வந்து, மாற்றத்தை உருவாக்கும் தியாகச் செல்வங்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளார்கள்.

மேலும், இது எமது மண்ணின் கதை... மக்களின் கதை...

விடுதலைப்போரை முன்னெடுக்கும் போராளிகளின் பின்னே அணிதிரளும் சுதந்திர தாகம் கொண்டோரின் கதை என வர்ணிக்கப்பட்டுள்ளது 'தாயகமே தாகம்'.

வெற்றி நடை போட்டு ஓடிய படமாகையால், மரணம் வாழ்வின் முடிவல்ல படமும் மிகத் தரமானதாகவே இருக்கும் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் இருந்தது. ஈழமுரசு வாரமலர் ஒன்றில் கலைக்கூடம் என்ற பகுதியில் மரணம் வாழ்வின் முடிவல்ல திரைப்படம் பற்றி பின்வருமாறு விமர்சிக்கப்பட்டிருந்தது.

"ஏற்கனவே எமது விடுதலைப் போராட்ட நிகழ்வுகளை பின்னணியாகக் கொண்டு, 'தாயகமே தாகம் ' என்ற வீடியோ திரைப் படம் ஒன்றினை தயாரித்து வெளியிட்டுள்ள தமிழர் கலாச்சார வட்டத்தினர் மரணம் வாழ்வின் முடிவல்ல என்னும் மற்றுமோர் படத்தினை தயாரித்துள்ளனர். இது போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் விபரீத விளைவுகள், தமிழ் -முஸ்லீம் ஒற்றுமை, இன விடுதலை போராட்ட நிகழ்வுகள், இராணுவ ஊர்காவல் படையினரின் அட்டகாசங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கதை.

மேலும், மரணம் வாழ்வின் முடிவல்ல என்ற படத்தினை பார்வையிட்ட எமது தேசியத் தலைவர் அவர்கள், அதனைப் பாராட்டி சுமார் நான்காயிரம் ருபா பரிசினை தமிழர் கலாச்சார வட்ட தலைவர் திரு. கேசவராஜா அவர்களிடம் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய செயல் மூலம் விடுதலைப் போரில் கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து போராட்ட காலத்தில் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக மக்களை ஊக்குவிக்க 'நல் உதயம்' என்ற பெயரில் அரியாலையில் சந்திரகுமார் என்பவர் உற்பத்தி சம்பந்தமாக ஒரு வீடியோத் திரைப்படத்தையும், அதன் பின் நிதர்சனம் பிரிவினர் 'இனி ஒரு விதி' என்ற வீடியோத் திரைப்படத்தையும், பின்னர் கலை பண்பாட்டுக் கழக முல்லை மாவட்டப் பிரிவினர் 'தமிழோசை' என்ற வீடியோத் திரைப்படத்தினையும் வெளியிட்டுள்ளனர். இதைவிட இன்னும் பல திரைப்படங்கள் ஆங்காங்கே தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற தகவல்களும் கிடைத்திருக்கின்றன.

இந்தக் கட்டுரை வாயிலாக, வீடியோ திரைப்பட ரசிகர்கள் -தயாரிப்பாளர்கள் -கலைஞர்கள் சார்பில் நாம் எதிர்பார்ப்பது என்னவெனில், தமிழீழமெங்கும் அடங்கியிருக்கும் இத்திரைப்படத் துறைத் திறமைகள் அனைத்தும், எமது போராட்டத்தை கொச்சைப்படுத்தாத -நசுக்காத -பின்னடிக்காத -பண்பாட்டுச் சீர்கேடு அற்றவகையில் வீடியோத் திரைப்படமாக வெளிவரவேண்டும். அவற்றை கலைபண்பாட்டுக் கழகமானது ஆய்வு செய்து சரிபார்த்து, அங்கீகரித்து, தயாரிப்பாளர்களிடமிருந்து அதனை நியாயமான விலைக்குப் பெற்று, திரையரங்குகள் மூலம் ஒழுங்கான முறையில் மக்கள் பார்த்து ரசிக்க வகை செய்து கொள்ள வேண்டும் என்பதுதான். ■

**- நன்றி: வெளிச்சம்**

**ஸ்ரீதர்**
யாழ்ப்பாணம்

**தெய்வேந்திரா**
சாவகச்சேரி

**திரையரங்குகளில்**



தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30மணி, மாலை 4.00 மணி, 6.00 மணி
(சி-6867)

**தமிழோசை**

தொலைக்காட்சிப் படம்

இது ஒரு "தரிசனம்" சிறப்பு வெளியீடு



போர்க்காலப் பாடல்கள்
தலைவரின் மாவீரர்நாள் செய்தி

**"தமிழோசை":**
முல்லைமாவட்ட கலைபண்பாட்டுக் கழகம் வழங்கும், தென்தமிழீழ மக்களின் போராட்ட வாழ்க்கையைச் சித்தரிக்கும் தொலைக்காட்சிப் படம்.

**நெறியாள்கை:**
பொ.தாசன்

**போர்காலப் பாடல்கள்:**
முத்தமிழ் விழா இசை நிகழ்ச்சியில் கண்ணன் இசைக்குழுவினர்.

**பாடல்களைப் புனைந்தவர்:**
கவிஞர் புதுவை இரத்தினதுரை.

**குரல் கொடுத்தோர்:**
சாந்தன்
சியாமளா
ராதிகா
மிதிலா விவேகானந்தன்
குணசிங்கம்
பவுஸ்ரின் சியோன்

தலைவரின் 1992 ம் ஆண்டு மாவீரர் நாள் செய்தி

**இதன் பிரதிகளை சகல கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.**

## நோர்வே கிளை...

கிளையின் பணியை இலகுவாக்கியுள்ளது. இவ்வகையில் வட நோர்வேயிலுள்ள தமிழர் தொடர்பு நிலையம் (BATSFJORD), தமிழர் கலாச்சார சங்கம் (MOLDE), நோர்வே தமிழ்ச் சங்கம் (OSLO), TAMIL DEVELOPMENT NETWORK OF NORWAY (TROMSO) என்பன போன்ற அமைப்புக்கள் இத்திட்டத்திற்கு பெருமளவு ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளன. தவிர வேறு சில அமைப்புகளும் இத்திட்டத்திற்கு உதவுவது பற்றி ஆராய்ந்து வருகின்றன.

மேலும் இத்திட்டத்திற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழக நோர்வேக் கிளை மாபெரும் அதிட்டலாபச் சீட்டிழுப்பொன்றையும் நடத்தவுள்ளது.

குழந்தைகள் தமக்காகக் குரல் கொடுக்கமாட்டா. இக் குழந்தைகளின் எதிர்காலத்திலும், வாழ்க்கைத் தரத்திலும் அக்கறை கொண்டவர்களாலும், சமூக நோக்குக் கொண்ட தமிழ் மக்களால் மட்டுமே இந்த அபாய நிலையிலிருந்து எமது எதிர்காலச் சந்ததியை காப்பாற்ற முடியும். இன்று நாம் இவ் விடயத்தில் தலையிடவில்லையென்றால், எமது குழந்தைகளை முந்திய நிலைக்குக் கொண்டு வருவது இயலாத காரியமாகிவிடும்.

**- குமரன் -**

# தேசிய உருவ

# இலங்கைத் தமிழ

## A Nation building pro

"சுதந்திரத்தை ஏற்க மறுத்து, சுதந்திரத்தை வேண்டுகின்ற போராட்டம்" என சிறீலங்காவில் தமிழர்கள் நடாத்தும் போராட்டத்தை 'போரும் அமைதியும்' என்ற சர்வதேசப் படத்தில் மைக்கல் கிட்ரொனும், டான் சிமித்தும் குறித்துள்ளனர். அத்துடன் 1947 இல் பிரித்தானியர் இந்தியப் பேரரசைக் கைவிட்டதன் பின்னர் புதிய நாடுகளுக்குள் நடைபெறும் போராட்டங்கள் வரிசையில் இதனை எடுத்து நோக்கியும் உள்ளனர். "காலனித்துவ அல்லது ஒடுக்குமுறைக்குட்பட்ட மக்கள் சர்வதேச சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எவ்வழியையேனும் பயன்படுத்தி அதிலிருந்து விடுபட உரிமையுள்ளவர்கள்" என 'மனிதனதும் மக்களதும் உரிமைகள்' என்ற ஆபிரிக்க சாசனம் ஏற்றுக் கொள்கிறது. இந்த அடிப்படையில் சிறீலங்காவில் வாழும் தமிழர்களின் போராட்டம் காலனித்துவ அல்லது ஒடுக்குமுறையின் கீழ் உள்ள மக்களின் போராட்டமாக சர்வதேச சமூகம் ஏற்று வருவதன் காரணமாகவே, 1993 மாசியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழு, சிறீலங்காவின் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களை சுயநிர்ணய உரிமையுள்ள 'மக்கள்' என ஏற்றுக் கொள்ளும்படி 15 சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் கையெழுத்திட்ட மனுவை, "காலனித்துவ அல்லது ஒடுக்குமுறையின் கீழ் உள்ள மக்களின் சுயநிர்ணய உரிமை" என்ற விதியின் கீழ் அனுமதித்தது. இவை ஈழத்தமிழர்களுடைய பிரச்சினை சர்வதேசமயப்படுத்தப்பட்ட ஒன்றாக மாறிக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துகின்றன.

வேர்ணன் மார்ஸ்டன் கீவிட் தனது 'தென்னாசியாவின் சர்வதேச அரசியல்' எனும் நூலில் "1971 இல் கிழக்கு பாகிசுத்தான் பிரச்சினை போன்று சிறீலங்காவின் இன்றைய யுத்த நிலையும், சிறீலங்கா அரசின் சட்டகத்துள் தீர்க்கப்படலாம் என்ற நிலையைக் கடந்துவிட்டது" என்கிறார். "1983 இல் இருந்து அதிகரித்துவரும் இனவன்முறைகளின் உயர்வைப் பார்க்கும்போது இச்சூழ்நிலையைக் கையாள்வதில் சிறீலங்கா அரசாங்கத்தின் ஆற்றலிலும் மன விருப்பிலும் சந்தேகமும் ஐயப்பாடும் தோன்றுகிறது" என லியோ றோகும், திலக் சமரநாயக்காவும், 'ஆசிய அளவீடு' என்ற நூலில் எழுதிய 'சமீபகாலக் குழப்பங்களின் பொருளாதாரத் தாக்கங்கள்' என்ற கட்டுரையில் கூறியுள்ளனர்.

உண்மையில் சிறீலங்கா என்பது சிங்களவர், தமிழர் என்கின்ற இரு தேசிய இனங்களையும் சிங்கள இராச்சியங்கள், தமிழ் இராச்சியங்கள் என்ற அரசுகளையும் உள்ளடக்கிய ஒன்றாக விளங்குவதே பிரச்சினைகளின் வித்தாக உள்ளது. ஆகவே காலனித்துவ ஆட்சி முறையால் பெரும்பான்மை இனம் என்கின்ற அந்தஸ்த்தை மக்கட் பெருக்கத்தால் பெற்றுவிட்ட சிங்கள பௌத்த அரசாங்கம், தமிழர்களை சிறுபான்மையினராக்கி, அவர்களை மாற்றான்தாய் மனப்பான்மையுடன் நோக்குவதும், அரசியல் தந்திரங்களாலும் இராணுவப் படைப்பலத்தாலும் இன ஒடுக்குமுறைகளுக்கும் அழிப்புகளுக்கும் உள்ளாக்குவதும் ஆச்சரியப்படத்தக்கவையல்ல. ஆகவே சிறீலங்காவின் யுத்தநிலையினை தெளிவாகப் புரிந்து கொள்ளுவதாயின் 'சிறுபான்மை -பெரும்பான்மை பிரச்சினை' என்ற உள்நாட்டுப் பிரச்சினையாக இதனைப் பார்க்கும் நிலையைக் கைவிடல் வேண்டும். தமிழர் -சிங்களவர் 'மக்கள்' (People). இரு மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பது ஏற்கப்பட்டால் மட்டுமே சிறீலங்காத் தீவு அமைதி வழிக்குத் திரும்பும்.

இவ்வடிப்படையில் சிறீலங்காவின் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் எவ்வாறு 'மக்கள்' என்ற பதத்திற்கு ஏற்புடையவர்களாவர் என இனிப் பார்ப்போம்.

இலங்கைத் தமிழர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தொடர்ந்து வரும் கலாச்சாரத்தையும் மொழியையும் உடையவர்களாகவும் தாம் வாழும் பிரதேசத்தின் எல்லைகளைத் தொடர்ந்து பேணி வருபவர்களாகவும் (இன்று வடக்கு, கிழக்கு என அழைக்கப்படும் பிரதேசம்), ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வாழும் மனோநிலையைக் கொண்டவர்களாகவும், தம்மேல் காலனித்துவ சிங்கள ஆக்கிரமிப்புக்கள் ஏற்பட்ட வேளைகளில், அதனை எதிர்த்துப் போராடும் மனோபாவம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வடிப்படையில் பார்க்கும்போது ஸ்டாலின் கூறிய 'மக்கள்' எனும் சொல்லின் வரைவிலக்கணமாகிய 'தொடர்ச்சியாக, எல்லைகளுக்குள் வாழும் மொழி, கலாச்சார ஒத்தியல்புடைய சேர்ந்து வாழும் மனோபாவம் உடையவர்கள், மக்கள்' என்பதை இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் பூர்த்தி செய்கின்றனர்.

இதேவேளை, காலனித்துவ ஆட்சியில் மிக நீண்ட காலம் (1833 முதல் -1972 வரை) வடக்கு, கிழக்கு ஒற்றையாட்சிக்குள் இருந்துள்ளது. எனவே தமிழர்களின் எல்லைகள் தொடர்ந்தும் இருந்து வந்துள்ளதா எனக் கேள்விகள் எழலாம்.

இதனை ஒரு சிறிய உதாரணத்தின் மூலமே தீர்த்து வைக்கலாம். 'நீதியும் அநீதியுமான யுத்தங்கள்' எனும் நூலில் மைக்கல் வல்சர் ஒரு வரலாற்றுச் சம்பவத்தைக் குறிப்பிடுகிறார். ஐரோப்பாவில் அலேஸ் (Alsace), லொறாயின் (Lorraine) மாகாணங்கள் 200 ஆண்டு காலமாக பிரான்சின் ஆளுமையுள் இருந்து வந்தன. ஜேர்மனியர், பிரான்சின் 14ம் லூயிஸ் மன்னன் இப்பிரதேசத்தைக் கைப்பற்ற முன் இப்பகுதி புனித ரோம சாம்ராச்சியத்தின் ஒரு அங்கமாக இருந்தது எனவும், மொழி கலாச்சாரத் தொடர்பால் அது ஜேர்மனுக்கு சேரவேண்டும் எனவும் கூறினர். 1870 இல் இப்பிரச்சினை ஏற்பட்டது. 1871 இல் பிரான்ஸ், அலேஸ் மாகாணம் முழுவதையும், லொறாயினின் பெரும்பகுதியையும் ஜேர்மனுடையதாக ஏற்ற சமாதான ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது. இச்சம்பவத்தை ஆய்வு செய்தவர்கள் 'எல்லைகளின் தொடர்ச்சித் தன்மை' என்பது சொத்துடமையை மட்டும் அடிப்படையாகக் கொண்டதொன்றல்ல என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வாறே கம்யூனிச நாடுகளில் தேச உடமையாக்கல்கள் நடைபெற்றது. இவ்வேளைகளில் தேசிய இனங்களின் நிலங்கள் எல்லாம் அரச உடமையாகியது. ஆனால், இன்று கம்யூனிச கட்டமைப்பு ஐரோப்பாவிலும், ரஸ்யாவிலும் உடையும்பொழுது தேசிய இனங்கள் தமது எல்லைகள் தொடர்ந்து வந்தன என்ற அடிப்படையில் அரசமைக்கின்றன. எனவே காலனித்துவ ஆட்சியிலோ அல்லது சிங்கள ஆட்சியிலோ தமிழ்ப் பிரதேசங்கள் அகப்பட்டமை, தமிழர்களது "சுயநிர்ணய உரிமை உள்ள மக்கள்" ஆவதற்கான உரிமையை ஒருபொழுதும் மாற்றவில்லை.

அவ்வாறே, தமிழர் பரந்து வாழும் தன்மையைச் சுட்டிக் காட்டி வடக்கு -கிழக்குக்குரிய தமிழர்களில் பெருமளவானவர்கள், வடக்கு -கிழக்குக்கு வெளியே உள்ளனர் என்ற விவாதத்தை முன்வைப்பது வழமை. உண்மையில் யூதர்கள் உலகெல்லாம் பரந்து வாழ்ந்த நேரத்தில்தான் இஸ்ரேல் நாடு உருவானது. இன்று பாலஸ்தீன மக்கள் பாலஸ்தீனத்துக்கு வெளியே வாழ்வதால் பாலஸ்தீனம் தனது தேசியத்துவ நிலையை இழக்கவில்லை.

சுருக்கமாகச் சொன்னால், "ஒரு தொகுதி மக்கள் தாம், 'மக்கள்' எனும் அந்தஸ்த்துக்கு உரியவர்கள் என்று ஏற்றுக் கொண்டாலே அவர்கள் மக்களாவார்கள்." (The simplest statement that can be made about a nation is that a body of the people, Who feel that they are nation)

இக்கட்டத்தில், முஸ்லீம்கள் தமிழ் பேசுபவர்கள். அவர்கள் தமிழ் மக்கள் என்ற தேசியத்துவத்துள் அடக்கப்படக்கூடியவர்களா என்ற கேள்வி எழுகின்றது. முஸ்லீம்களுக்கு, தமிழ் மக்களுடன் 'சேர்ந்து வாழும் மனோபாவம்' இருக்கவில்லை என்பதே அவர்களை தமிழ்த் தேசியத்துக்குள் அடக்க இடம் மறுக்கிறது. அவர்கள் தங்களை, தமிழர்கள் என அழைப்பதில்லை. தமிழ் பேசும் முஸ்லீம்கள் என்றே அழைக்கின்றனர். மறுபுறத்



# Network

August 1993

Published by the International Federation of Tamils


> "We launched our struggle for self determination and political independence because of the systematic oppression of our people by the Sri Lankan state..."
>
> - Velupillai Pirabakaran, Leader of the Liberation Tigers of Tamil Eelam

## LTTE International Secretariat replies to Sri Lanka Statement in Geneva:

# "Peaceful resolution of the conflict in the island will not be furthered by Sri Lanka categorising the lawful armed resistance of the Tamil people as 'terrorist' activity"

The International Secretariat of the LTTE in a press release dated 16 August 1993, hit back at the statement made on 11 August, by the Leader of the Sri Lanka Delegation, Mr.Tilak Marapane, at the 49th Sessions of the UN Sub Commission on Prevention of Discrimination and Protection of Minorities in Geneva.

**The LTTE International Secretariat said: "It is a matter for regret, though not a matter for surprise, that the leader of the Sri Lanka Delegation to the Sub Commission failed to address the underlying causes of the continuing conflict in the island, and failed to recognise that the armed struggle of the Tamil people for self determination, arose as a response to decades of gross and systematic violations of their human rights under successive Sinhala dominated governments, within the confines of an unitary Sri Lankan state. The peaceful and constructive resolution of the conflict in the island will not be furthered by the Sri Lanka representative categorising the lawful armed resistance of the Tamil people, which arose from decades of oppressive rule by an alien Sinhala majority, as 'terrorist' activity."**

The Press Release went on:

"We note the statement of the leader of the Sri Lanka Delegation, Mr. Tilak Marapane, that his government 'is of the view that international isolation and rejection of the LTTE would certainly force the LTTE to reassess its position'. It appears that the Sri Lanka Government, concerned with the increasing support that the Tamil struggle for self determination has received in the international arena, and agitated with its failure to crush Tamil resistance on the ground, seeks to enlist the assistance of the delegates to the UN Sub Commission to further its unjust war against the Tamil people. And to this end, the leader of the Sri Lanka delegation has not hesitated to be economical with the truth. Mr. Marapane states: "A Select Committee of Parliament composed of representatives of all political parties in Parliament has been working to reach agreement on a just and lasting solution to the ethnic question.." What Mr.Marapane does not say is that his government has for the past three years and more used the Parliamentary Select Committee mechanism as a way of avoiding direct talks with the Liberation Tigers of Tamil Eelam. The Select Committee has deliberated for more than three years and the government is content to allow this farce to continue, in the full knowledge that a Select Committee consisting of Sinhala political parties who are at each others throats and who are intent on positioning themselves to capture power at the next elections will do nothing to resolve the conflict. The Select Committee mechanism provides the Sri Lanka government with a useful cover of 'reasonableness' for international consumption, whilst it continues its genocidal military operations against the Tamil people.

> "The Sri Lanka government has for the past three years and more used the Parliamentary Select Committee mechanism as a way of avoiding direct talks with the Liberation Tigers of Tamil Eelam. The Select Committee has deliberated for more than three years and the government is content to allow this farce to continue, in the full knowledge that a Select Committee consisting of Sinhala political parties who are at each others throats and who are intent on positioning themselves to capture power at the next elections will do nothing to resolve the conflict. The Select Committee mechanism provides the Sri Lanka government with a useful cover of 'reasonableness' for international consumption, whilst it continues its genocidal military operations against the Tamil people."

**Again the blatant untruths uttered by the Representative for Sri Lanka concerning the negotiations for the removal of the economic blockade imposed by his government on the Jaffna Peninsula and the opening of a safe passage for civilian traffic, shows the extent to which the Sri Lanka government is prepared to go in its efforts to crush the Tamil struggle for self determination.**

Mr. Marapane alleges that the LTTE rejected the mediatory efforts of the UNHCR to open safe passage for civilians to travel to the Jaffna Peninsula. This allegation is wholly false.

On the contrary, the LTTE welcomed the initiative taken by UNHCR to get the route along Poonakari opened for the movement of civilians. In fact, the LTTE suggested that civilians pass through the route under the supervision of UNHCR. However, given that the Sri Lankan army operated a checkpoint at Vavuniya for civilians travelling to the North, the LTTE objected to the Sri Lankan Army operating another check point at Poonakari, which was well within Tamil territory.

Mr. Marapane also alleges that the LTTE rejected the mediatory efforts of the UNHCR for the 'transport of essential requirements for the people ' in the North. This allegation too is wholly false. Mr. Marapane fails to disclose that the negotiations between Sri Lanka and the LTTE, for the transport of essential requirements, took place in connection with the request for the release of 39 Sinhala prisoners of war held by the LTTE. The facts are as follows:

*In June this year, in consequence of a fast undertaken by the Sinhala prisoners of war held by the LTTE Sri Lanka's Brigadier Weerasekera came to Jaffna. The LTTE requested Brigadier Weerasekera to give a list of the Tamil prisoners of war held by the Government of Sri Lanka. The LTTE told him that*

continued on page 4

## British Prime Minister responds to International Federation of Tamils:

# "...We have regularly said that our good offices are available to help talks start - unfortunately negotiations are no closer..."

British Prime Minister Rt.Hon. John Major, has responded to the letter sent by the International Federation of Tamils on the occasion of the march organised to mark the 10th Anniversary of the July'83 genocide of Tamils in the island of Sri Lanka. The text of the reply from the British Foreign & Commonwealth Office dated 9 August 1993 and addressed to Mr.A.C.– Shanthan, Secretary of the International Federation of Tamils, read:

**"Thank you for your letter of 24 July to the Prime Minister. I have been asked to reply on his behalf. I have read your analysis of the background to the conflict in Sri Lanka carefully. It is tragic that the fighting continues after so long. It is clearly the people of the North and East who are hardest hit. Their conditions are undoubtedly difficult. The British Government's policy is quite clear. We along with our European partners, believe the only way to achieve a lasting peace in Sri Lanka is through a negotiated, political settlement reached by all parties to the conflict. We have long urged this course of action as the only way forward to a lasting solution which recognises the rights of all the peoples of Sri Lanka. You will be aware that we have regularly said that our good offices are available to help talks start. Unfortunately negotiations are no closer."**

The IFT, in its letter of 24 July 1993, had urged the UK Government to support the call of 15 NGOs for international recognition of the Tamil population in the North-East of the island as a 'people' with the right to freely choose their political status.

The IFT letter (the full text of which appeared in the July issue of Network) pointed out: "The gross consistent and continuing violations of the rights of the Tamil people, by the Sri Lankan government and its agencies, have been well documented by innumerable reports of human rights organisations and independent observers of the Sri Lankan scene and the record shows:

***that the attack on the human rights of the Tamil people commenced more than forty years ago; that the attack was initially resisted by the Tamil people by non violent means together with a parliamentary campaign for a federal constitution; that this non violent resistance was met with planned Sinhala violence directed to subjugate the Tamil people to the will of a permanent Sinhala majority within the confines of an unitary state; that the armed resistance of the Tamil people arose as a defence against decades of oppressive rule by an alien Sinhala majority;***

continued on page 4

# Candidly Speaking

Nadesan Satyendra

**Thyagam defies direct translation into English. The closest English word, martyrdom, has too rough an edge to it. Thygam has a more rounded feel.**

A thyagi knows that he not only has a duty but that he also has the right to act. At the same time he knows that he has no right to the fruits of his action. In the action lies the reward. A thyagi knows that to seek change without a willingness to suffer to bring about that change, is but to end up making impotent pleas for fairplay and justice and issuing stultifying ultimatums without sanctions. A thyagi is no impotent pleader. He does not plead for fairplay and justice. He demands it. He does not beg for freedom. He is free. The cyanide capsule in the hands of the Liberation Tigers of Tamil Eelam is evidence not of a simple minded willingness to die but of a fierce determination that cries out: "I will not lose my freedom except with my life."

It is this determination and this cry which has found an answering response in the hearts and minds of the Tamil people everywhere, living today in many lands and across distant seas. It is this thyagam, it is this willingness to suffer to bring about change, which has made Velupillai Pirabakaran and the Liberation Tigers of Tamil Eelam not only the leaders of the Tamil national liberation struggle, but also its undying symbols.

The words of Velupillai Pirabakaran uttered on the occasion of the Maha Veerar Thinam in November 1992 bear repetition:

"The strength of our struggle arises from the fierce determination of our fighters. Their firm commitment and their courage to act without the fear of death are the force and resource of our struggle. The whole world is providing arms and funds to our enemy. We are not begging from the world. We stand firm on our own legs, on our own soil, with our own people and fight with our own hands. Since we are firmly rooted in our own strength we stand upright without bowing to the pressures of others. Today, our liberation struggle is situated in a complex historical conjuncture faced with new challenges and new crises. Our enemy, having firmly closed down the doors of peace, has embarked on a course of escalating the war...We are not warmongers who love violence. We want a permanent, stable and honourable peace. One day, when our enemy knocks at our doors for peace, we will extend the hand of friendship."

The Tamil national struggle is no afternoon tea party. The new balances that are being struck in the emerging multi–polar world are not without relevance to the struggle in Tamil Eelam. It used to be said that states have permanent interests but do not have permanent friends. This may be even more so in the case of nations struggling to become states.

Sometime ago, the Harvard University Graduate School of Business Administration, sent out a letter seeking new subscribers for one of its publications. The letter read:

"The professional practise of management is as challenging and complex as the practices of medicine and law. Yet we never hear of a 1-minute trial lawyer. One minute is about how long the physician or attorney who tries it will last. The quick fix. The too simple solution. The latest fad. They have no more place in your office than in the operating room or the court room."

That which is true in relation to the office, the operating room and the court is perhaps even more true in relation to a national struggle for freedom. Answers to the deeper issues which confront the Tamil national liberation struggle are unlikely to come from those who devote a few moments of their undoubtedly busy lives to suggest the 'quick fix', which they believe has somehow escaped the attention of those who have taken the struggle forward on the ground during the past several years. A busy expatriate Tamil professional in Australia once remarked to a Tamil activist: "You know, the trouble is that the 'boys' have brawn but no brains".

> **"The cyanide capsule in the hands of the Liberation Tigers of Tamil Eelam is evidence not of a simple minded willingness to die but of a fierce determination that cries out: "I will not lose my freedom except with my life." It is this determination and this cry which has found an answering response in the hearts and minds of the Tamil people everywhere, living today in many lands and across distant seas. It is this thyagam, it is this willingness to suffer to bring about change, which has made Velupillai Pirabakaran and the Liberation Tigers of Tamil Eelam not only the leaders of the Tamil national liberation struggle, but also its undying symbols."**

The reply from the Tamil activist was perhaps, overly sharp but it was telling: "My dear friend, the trouble with you is that you have neither the brawn nor the brains - neither the brawn to go to Tamil Eelam and join the struggle nor the brains to look deeper into the issues that confront the struggle and make a useful contribution from outside. If you had done the latter, you would have hopefully, begun to learn that to a leadership which has gone through the university of the liberation struggle on the ground, much of what you say will seem to come from the kindergarten".

The 1-minute 'political adviser' is not very different from the 1-minute brain surgeon or the 1-minute trial lawyer. One minute is about how long he will last in the struggle before succumbing to the forces ranged against it.

Every Tamil, wherever he may live, will need to ask himself where he stands in relation to the Tamil national struggle in Tamil Eelam. He needs to ask whether he supports the struggle of the people of Tamil Eelam for self determination. He needs to ask whether the Tamil people in the island of Sri Lanka were subject to an ever widening and deepening oppression under successive Sinhala dominated governments for several decades and whether an oppressed people have both the moral and the legal right to take to arms to resist that oppression.He needs to ask whether the armed struggle of the people of Tamil Eelam is not only just but also lawful.

He also needs to ask himself: "What does that struggle in Tamil Eelam mean to me ?" Is it some struggle 'out there' unrelated to his own existence? Or is it a struggle that is inextricably linked with his own natural identity and that of his children and his children's children?

**If he does not seek to deny his own past; if, on the contrary, he feels enrichened by his Tamil heritage; if he shares the pain and suffering of his brothers and sisters in Tamil Eelam because he has known something about the nature of that pain himself; if he knows that wherever he may live, his environment will continue to remind him, even on those occasions that he may forget, that he is a Tamil; if he believes that the culture of a people will die without the political power of a state committed to preserve it; if he recognises that to live with dignity as a Tamil in any land and not as a wandering nomad without a land, Tamil Eelam must take its place amongst the nations of the world - if he knows all this, then he will know that he has not simply the duty but also the right to involve himself in the struggle for Tamil Eelam and take it forward. He will know that he has not simply the duty but also the right to support the leaders of that struggle, the Liberation Tigers of Tamil Eelam. He will know that he has the duty and the right to support, not blindly, but with eyes open, not only with his heart but also with his mind, reasoning, purifying and strengthening the struggle, at every stage, in its onward lawful progress - but at the same time bowing his head in all humility before the thyagam of those on the ground who have given so much of themselves so that we, as a people, may live in freedom.**

## Network

The demand for Tamil Eelam is a national question. It is, accordingly, an international question as well.

On the one hand, Sinhala chauvinism cannot succeed in its attempt to subjugate the people of Tamil Eelam without aid and support from influential sections of the international community, both in the Indian region and outside. On the other hand, in the end, Tamil Eelam itself will need to secure broad based international recognition.

To address the international frame within which the Tamil national struggle must perforce take shape, is, therefore, not a matter of self indulgent luxury but a matter of immediate, direct and practical significance.

The new balances that are being struck in the emerging multi–polar world are not without relevance to the struggle of the people of Tamil Eelam. It is said states have permanent interests but do not have permanent friends. This may be more so in the case of nations struggling to become states.

If the 1950s and the 1960s were the decades of the anti colonial liberation movements, the 1990s is proving to be the decade of the post colonial national liberation movements. Self-determination is not a dirty word. The political force that it generates will, in the end, prevail over the power exerted by many existing state structures.

**Network** exists to help, support and network the world wide efforts being made to secure international recognition of the Tamil right to self determination.

Correspondence Address:

The International Federation of Tamils, 17, Birchview Close, Yateley, Camberley, Surrey GU17 7DL

## New Delhi 'Democracy'

**Whilst New Delhi continues with its efforts to manage the Tamil struggle in such a way as to serve its own internal and foreign policy objectives, the corruption that bubbled to the surface during the recent no confidence motion on the Narasimha Rao government served to expose not simply the government's tenuous hold on power but, more importantly, the rotting core of 'democracy', New Delhi style.**

India Abroad reported on 8 August on what it described as the 'scene of bribery and chicanery':

"An inebriated lawmaker, an injured damsel and a clutch of opposition MPs vulnerable to the ruling party's blandishments, came to the rescue of a tottering Narasimha Rao government last week. Together they made for an unappetizing and sometimes unseemly spectacle. There were open allegations in Parliament of money changing hands and members of parliament being plied with liquor and other temptations to influence their votes. Journalists reported having spotted businessmen with bulging briefcases roaming inside parliamentary corridors as a contingency measure for eleventh hour manipulation. There were accounts of lawmakers being shadowed by armed guards to prevent their being lured away by ruling party touts.

The Economic Times, a serious newspaper that is a favourite of the business community said, 'The political grapevine has been abuzz with the current rate of getting one vote. It was being put at Rs.500,000 for absenting, Rs. One Million for abstaining and anything from Rs.5 million to Rs.20 million for opposing the no confidence motion.'

Even during the debate, one of a four member faction from Bihar bargained that his group would vote with the government if Rao looked favourably on its demand for a separate state for the tribal population. Rao agreed and his government survived as seven members of the Janata Dal's Ajit Singh faction switched loyalties at the last minute in the ruling party's favour.

Rao's defence of himself and his government was an anticlimax. He skirted the corruption issue, the main focus of the opposition motion .. (and) ended by meandering through a morass of dry statistical data ...in such non controversial areas like fertilizer, oilseed and textiles."

Significantly, Ms.Jayalalitha's AIADMK voted with the opposition and supported the no confidence motion.

## Savitri comments on Nobel Prize Winners' Peace Plan:

# "Sri Lanka and LTTE should invite UN Secretary General to mediate"

**Four Nobel Prize Winners, George Wald of USA, Malread Corrigan-Maguire of UK, Ilya Prigogine of Belgium and Jan Tinbergen of Netherlands presented a 'peace plan for Sri Lanka' to the Sri Lanka Government and to the Liberation Tigers of Tamil Eelam in early August.**

The basic proposal of the 'peace plan' was that the Sri Lankan government and the LTTE should invite the United Nations Secretary General to send a special envoy to mediate a negotiated settlement.

This agreement could include the following provisions:

(a) A ceasefire verified by the United Nations. Precedent for such intervention is found in Security Council Resolution 186.

(b) The establishment of buffer zones through mutual agreement by the disengagement of military forces in selected areas, such as parts of the North and East.

(c) UN observed elections in the North and East.

The peace plan also argued for a federal form of government as a way of satisfying the 'aspirations in the North and East'.

The peace plan was initiated by the World Council for Global Cooperation in Toronto, Canada. The four Nobel Laureates have won prizes in their specialities. **Prof. George Wald** was awarded the Nobel Prize in 1967 for his insight in discovering the underlying chemical processes of human vision. An awowed pacifist, he campaigned against the Vietnam war and all forms of nuclear testing. He also served on the Peoples Tribunal established in 1985 to inquire into the genocide of Armenians by the Turks. **Ms. Mairead Corrigan-Maguire** of Northern Ireland won the award in 1977 for her efforts to end the violence in Belfast between Catholics and Protestants. **Prof. Ilya Prigogine** was awarded the Nobel Prize for Chemistry in 1977 for widening the scope of thermodynamics. He was born in Moscow at the start of the Russian Revolution. At the age of four, his parents fled with him as exiles and wandered through Lithuania and Germany before settling in Belgium. **Prof. Jan Tinbergen** won the prize in 1969 for Economics. He has been a pacifist since his youth. As a matter of conscience he refused to serve in the Dutch army.

Sri Lankan President D.B.Wijetunge's immediate response was an attempt to play down the significance of the Peace Plan. He reportedly told a foreign news correspondent in Colombo that the peace plan did not have any official status because it was from a non governmental body.

**However, President Wijetunge and his government have enough political savvy to know that a peace plan supported by four Nobel Prize Winners, and that too, residing in four different countries, did not materialise from thin air.**

The state controlled Sri Lanka Sunday Observer of 8 August 1993 carried a photo of the UN Secretary General Mr. Boutros Ghali together with Ms. Mairead Corrigan-Maguire and Mr. James Nicholas, the International Secretary of the World Council for Global Co-operation. The message of the photograph was not lost on the Sri Lanka Government.

பெத்த பிள்ளையிடம் கூட இவ்வளவு உரிமையாகப் பேசமாட்டாள் பாட்டி, வவுனியாவில் போராளிகள் ஓடி ஓடி வந்து சாப்பிட்டிட்டுப் போற வீடுகளில் இதுவும் ஒன்று.

விடுதலைப் போர் தொடங்கிய நாளில் இருந்து வவுனியாவில், எமது போராளிகள், "அம்மா வீட்டுக்குப் போட்டு வாறன்" என்று சொன்னால் அது வேறு வீட்டைக் குறிக்காது.

வீட்டுக்கு முன்னே சற்றுத் தள்ளி பட்டிக்குள் நூறு இரு நூறு மாடுகள் நின்றன. பட்டி இன்னும் திறந்துவிடப்படவில்லை என்பது தெரிந்தது.

கடப்பருகே வெண்ணிறமான இரண்டு நாம்பன் கன்றுகள் கட்டப்பட்டிருந்தன.

வன்னியின் செல்வங்கள் அவை.

இன்று அவையிரண்டும் மட்டுமே முப்பதினாயிரம் ரூபா பெறும்.

குசினி வாசலில் தேசி மரமொன்று பழுத்துத் தொங்கியது. தேசி மரத்துக்குக் கீழே நாலைந்து கோழிகள் சாம்பல் குளித்துக் கொண்டு கிடந்தன.

குடத்தடியில் சாம்பல், மொந்தன் வாழை ஒன்றிரண்டு பழுத்த குலையுடன் நின்றது.

சுற்றிலும் அவதானித்துக் கொண்டிருந்த என்காதில் பாட்டியும் தினேசும் பேசிக் கொள்வதும் விழத் தவறவில்லை.

"எண, உன்னட்டை எண்டு வந்திருக்கிறன், என்ன சாப்பாடு தரப்போறாய் சொல்லு."

"ஓ.... நீ வருவாய் எண்டு நானென்ன மை போட்டே பாத்தனான். இவடமெல்லாம் சுத்திப் போட்டு விடியக்காலமை வந்து நிண்டு கத்துறாய்; சும்மா வந்து, பேய்க்காட்டிப் போட்டு போகலாமெண்டு வந்தனியே."

பாட்டி கதைத்துக் கொண்டிருக்கும்போதே குசினிக்குள் அடிக்கடி போய் வந்தாள்.

"பாட்டி, தினேசுக்கு கலியாணம் நடக்கப் போகுது; அது தான் ஆள், உங்களுக்குச் சொல்லிப் போட்டுப் போக வந்திருக்குது." என்றேன்.

"ஆர், உவனுக்கோ! பொம்பிளையள திரும்பியும் பாக்காத உவனுக்கு ஆரு பொம்பிளை குடுப்பாங்கள். இந்த ஜென்மத்தில உவனுக்கு ஒருதரும் பொம்பிள குடுக்காங்கள்; பரதேசி; எனக்கு தெரியாதே உவனப்பற்றி."

பாட்டி தினேசைப் பற்றி எந்தளவுக்கு எடை போட்டு வைத்திருக்கின்றாள்.

"ஏன் மற்றது; அதுதான் ஜெயத்தான்; அவனிட்டைப் போய்ச் சொல்லு என்ர செத்த வீட்டுக்கும் முத்தத்தில மிதிக்க வேண்டாம் எண்டு."

"பாரிடா மோன உவங்களுக்கெல்லாம் இப்ப ஆக்கள் கூடிப்போச்சு." என்று கூறிக் கொண்டே குசினுக்குள் சென்றவள் புட்டுப் பீங்கானுடன் வெளியே வந்தாள்....

பச்சையரிசிப் புட்டு... உடும்பு இறைச்சிக்கறி..... பொரியல்....

ஒரு கிண்ணிக்குள் பிளந்து பிளந்து கிடக்கும் பசுத்தயிர்.

"ஏன் பாட்டி, கறியொண்டும் இல்லையெண்டு சொன்னியள்; தினேசைப் பேசினியள்; இப்ப".....

"என்ன செய்யிறது; சுத்திக் கொண்டு இஞ்சை வராமல் போகானெண்டு எனக்குத் தெரியும். அதால இறைச்சியை வாங்கி அவிச்சு வைச்சனான். இதுகள் இருந்தாப் போல கவிண்டு போடுங்கள்,

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# அவர்கள் சுமப்பது விறகல்ல

# பாரச் சிலுவை

மத்தியானப் பொழுதில் வல்லிபுரக் கோயில் மரநிழலில் கடற்காற்றுடன் கூடிய வெய்யில் வெதுவெதுப்பாக இருந்தது. விறகுச் சுமையுடன் சைக்கிள்களில் வரும் விறகு வியாபாரிகள் ஊர் திரும்புகின்ற வழியில் வல்லிபுரக் கோயில் மரநிழலில் ஒதுங்குவது கட்டாயமாகிப் போகின்றது. அவர்கள் ஊர் திரும்புகின்ற நேரம் அப்படி. தேரோடும் வீதிக்கப்பால் இரண்டு பலகாரக் கடைகள். எந்த ஒரு காரியத்துக்கும் -தண்ணீர், வெந்நீர் குடிக்கவோ, நிழலில் இளைப்பாறவோ வல்லிபுரக் கோயிலுக்குத்தான் அவர்கள் வரவேண்டியிருக்கிறது.

விறகு வியாபாரிகள், சையிக்கிள்களை கண்ணுக்கெட்டிய தூரத்தில் மங்கிய நிழலில் நிறுத்தி வைத்துவிட்டு மரநிழலில் உட்கார்ந்தபடியே கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். மரவேரில் இருந்தபடியே பக்கத்தில் இருந்தவரை இலேசாக அணுகி பேச்சுக் கொடுத்து விறகு வியாபாரத்தைப் பற்றிக் கேட்டபோது:

1983 க்கு முன்னர் தினசரி மேசன் வேலை கிடைக்கும். பல கட்டட வேலைகளும் நடைபெற்றன. அப்போதெல்லாம் ஞாயிற்றுக் கிழமைகளில் வீட்டில் நிற்பதே பெரிதாக இருந்தது. 1983 யூலை மாதத்தில் திருகோணமலையில் ஏற்பட்ட தமிழர்களுக்கு எதிரான வன்முறைக் கலவரத்தினால் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டு எனது மனைவியின் ஊரான கம்பர்மலைக் கிராமத்துக்கு மூட்டை முடிச்சுக்களுடன் வந்துவிட்டேன்.

கட்டட வேலையில் இலாபத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை அப்போது வடமராட்சியில் இல்லை. நாளொன்றுக்கு நூற்றி இருபத்தைந்து ரூபா வரை சம்பளம் வாங்குகின்ற வேலை. எப்போதாவது ஒரு நாளைக்கு வேலை கிடைக்கும். மேசன் வேலையை நம்பி பிள்ளைகளுக்கு ஒரு நேரச்சாப்பாடு கூடப் போடமுடியாத நிலை. வெட்டுகிறது, கொத்துகிறது என்று தோட்டக் கூலி வேலைக்குப் போனேன். இந்த வேலையும் கொஞ்ச நாள் தான். என்னைப் போல் தொழில் இல்லாதவர்கள் எத்தனை பேர். அதிலும், சித்திரை, ஆடியில் தோட்டத்தில் கோடைப் பயிர் செய்தால் வேலை கிடையாது. சும்மா தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தால் அடுப்பில் பூனைதான் படுக்கும். அதனால் விறகுத் தொழிலில் நுழைய வேண்டியதாயிற்று. இந்தத் தொழிலுக்கு வேறு தொழில் போல் கைமுதல் தேவையில்லை. முதலில்லாத வியாபாரம் வீட்டிலுள்ள கத்தியும், கோடரியும் போதுமென்றார் தங்கராசா.

உச்சிப் பொழுதுக்கு மேலாகிச் சூரியனும் மேற்குப் பக்கம் சாயத் தொடங்கினான். சோம்பல் முறிப்பதுபோல் நிமிர்ந்து அமர்ந்து கொண்டார் வல்லிபுரம் தங்கராசா. சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கக்கூடிய தோற்றம். பிறப்பு வளர்ப்பு எல்லாம் திருகோணமலைதான். கம்பர்மலைச் செம்பாட்டில் திருமணம் செய்துகொண்ட தங்கராசாவுக்கு ஆறு பிள்ளைகள். நான்கு பேர் பள்ளிக்கூடம் போகிறார்கள்.

தலையைக் கோதிவிட்டபடி அவர் சொன்னார்:

நாகர் கோயில், அம்பன், குடத்தனைக் காடுகளில் விறகு வெட்டுகிறேன். குடத்தனையில் தொடங்கினால் இந்தக் காடு இயக்கச்சிக்கு அப்பால் பரந்து செல்கிறது. இந்தக் காடுதான் எங்கள் தொழிற்களம் என்றாலும் விறகு தேடி அதிகதூரம் போக முடியாது. எங்கள் சைக்கிள் ஓட்டமெல்லாம் சுமார் பதினைந்து, இருபது மைல்தான். பார்த்தால் போதும்; அந்தக் கஸ்டத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியும். விடியப்புறம் நான்கு மணியளவிற்கு வீட்டிலிருந்து ஆரம்பித்தால் நிலம் தெரிய வல்லிபுரக் கோயிலடிக்கு வந்து சேர்ந்துவிடுவேன். எங்களில் பன்னிரண்டு பேர். அவர்கள் வந்து சேர்ந்ததும் எமது காட்டுப் பயணம் ஆரம்பமாகும். ஒரு சாப்பாடு கட்டிக் கொண்டு போகிறேன். ஒரு வேளை சாப்பாடு. மறுவேளை பட்டினி என்று காலம் சக்கரமாய் ஓடுது. மதியம் திரும்ப விறகுச் சுமையுடன் கரையேறுகிறோம். சைக்கிள் ஓடிய களையில் வல்லிபுரக் கோயிலில் ஒரு தரிப்பிடம். பேக்கரி, வீடுகளுக்கு ஓடருக்குக் கொண்டுபோகிற விறகை இடையில் நல்ல விலை கிடைத்தால் விற்றுவிடுவேன்.

தங்கராசா சொல்லிக் கொண்டிருக்கும்போதே மற்றவர்களும் பெருமிதமாய் வந்து பக்கத்தில் சுற்றிவர அமர்ந்தார்கள். எதிரே தெருவில் விறகுச் சுமையுடன் சைக்கிளில் வந்தவரின் கையில் இருந்து இரத்தம் கசிந்து கட்டியிருந்த துணியை நனைத்துக் கொண்டிருந்தது. அது காலை, காட்டில் விறகு வெட்டியபோது கத்தி வெட்டிய காயமாம்.

வெயிலும் பொசுக்கி எடுத்தது. நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு பேச்சைத் தொடர்ந்தார்.

பச்சை விறகு வெட்டக்கூடாது என்ற எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. அப்படிக் கொண்டு வந்தால் காவல்துறை பிடித்துவிடும். உயிருள்ள பச்சை மரங்களை கொஞ்சம் கொஞ்சமாக வெட்டினால் காடு அழிந்து போகும். ஆனால் காட்டிற்குப் போய்ப் பார்க்க வேண்டும். பச்சை மரங்கள் வெட்டுகிறவர்கள் அடங்கிற பாடாக இல்லை. ஊருறங்கும் நேரத்தில் ஈரப்பசையுள்ள மரங்களை அக்கம் பக்கத்து கிராமங்களில் உள்ளவர்களும் வெட்டியெடுத்துவிடுகிறார்கள். கடலோரமாக மணற்தரையிலுள்ள நாவல், கிண்ணியா மரங்களையும் வெட்டக்கூடாது என்று தடையுள்ளது.

தகுந்த பாதுகாப்பில்லாத தொழில் இது. கரடு முரடான பாதையில் விறகுச் சுமையுடன் சைக்கிள் ஓடி வரும்போது சில வாகன ஓட்டிகள் மனித நேயத்துடன் ஒதுங்கிப் போவதில்லை. ஒருமுறை, நெல்லியடி யூனியன் கட்டடத்துக்கு முன்னால் விறகுச் சுமையுடன் வந்த என்னை லொறியொன்று மோதிவிட்டு நில்லாமல் கொள்ளாமல் பறந்துவிட்டது. ரியூசனுக்குப் போன பிள்ளைகள் சத்தம் கேட்டு, என்னமோ ஏதோ என்று ஓடிவந்து என்னைக் காப்பாற்றினார்கள்.

நம்பிக்கை இல்லாத தொழில் இது. எதுவும் நடக்கும் -இப்படி ஒருவர். அவர் விறகு வெட்ட நெஞ்சளவு நீரில் சில சமயங்களில் இறங்கவேண்டும். சேறும் சகதியுமான இடங்கள். சில சமயங்களில் விசப் பாம்பு குறுக்கே வரும். நெல்லியடியில் சைக்கிள் விறகுக் கட்டில் இருந்த பாம்பு தீண்டி ஒருவர் உயிர் நீத்தார். பிற்பாரம் கட்டி, சைக்கிள் தூக்கி அடித்ததால் ஒருவர் மரணமான சம்பவமும் உண்டு. இவை தவிர, காட்டு வழியில் 'வழிப்பறிக்கொள்ளையர்' அட்டகாசம் வேறு. சேட்டும், லோங்சும் போட்டவர்கள் எங்களை வழிமறித்து மடக்கி, மிரட்டி விறகுச் சுமையைக் கொள்ளை அடித்து விடுகிறார்கள். இவர்களை யாரும் கண்டுகொள்கிறார்கள் இல்லை. அந்த இடங்கள் தான் எங்கள் குடும்பங்களுக்குச் சோறு போடுகிற இடம். அதனால் வீண் தொந்தரவுக்குப் போகாமல் தணிந்து போக வேண்டியுள்ளது. இது இப்படியிருக்க, பட்டமரத்தை அடிவேரிலிருந்து கிளப்பும் மட்டும் கண்டும் காணாதது போல் இருந்து விட்டு, "இது எங்கள் காடு. விறகுக்கட்டைகளை அரக்கக் கூடாது" என்று குய்யோ முறையோ என்று சத்தம் போடுவார்கள் -இவ்வாறு கூறினார்.

விறகு வியாபாரத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதுமா என்று கேட்டபோது:-

பறந்து பறந்து பாடுபட்டாலும் படுக்கப் பாய் இல்லை என்பது போல் எங்கள் நிலை மிகவும் கஸ்டம் என்று ஆரம்பித்தார் தங்கராசா.

## சந்திப்பு: மதன்

ஒரு சுமை விறகை சராசரி நூற்றி ஐம்பது ரூபா முதல் நூற்றி எழுபத்தைந்து ரூபா வரை விற்கலாம். தேனீயாகப் பறந்து பறந்து உழைக்க முடியாது. கிழமையில் நான்கு நாட்கள் தான் காட்டுக்குப் போகலாம். தினமும் போக உடம்பு இடம்தராது. குடும்பச் செலவு அதிகம். இலவசக் கல்வி என்று பேச்சுத் தான். கொப்பி, பென்சில் என்று எதற்கெடுத்தாலும் காசு. பிள்ளைகளின் மருந்துச் செலவு வேறு. மருந்துப் பொருட்கள் யானை விலை விற்கின்றன. காணி, பூமி இல்லாத வறுமைப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து பெண்கள் இப்போது விறகு வெட்ட வருகிறார்கள். அவர்கள் வயது பதினெட்டுக்கும் இருபதுக்கும் இடையில் இருக்கலாம். நெல்லியடியில் இருந்து அம்பன் வரையில் காட்டு வழியில் சைக்கிள்களில் வருகிறார்கள் என்றால் பாருங்களேன். எல்லாம் வறுமைதான் காரணம். அல்லது வீட்டில் அடுப்பு எரியாது என்றார்.

சைக்கிள் கம்பி ஒன்று ஒன்பது ரூபா. அதைப் பூட்ட இருபது ரூபா கூலி. விலை இறங்கிவிட்டதென்று சும்மா சொல்லக்கூடாது. ஆயிரத்து இருநூறு ரூபா விற்ற சைக்கிள் பின்குடம் இப்போது தொளாயிரம் ரூபா. கரடு முரடான பாதை. அடிக்கடி ரயர், ரியூப் மாற்ற வேண்டும். கிழமைக்குக் குறைந்தது நூறு ரூபா சைக்கிள் செலவுக்கு முடியும் -இப்படி இன்னொருவர்.

கூட்டம் கூடிக் கட்டடத் தொழிலாளர் சங்கம் அமைத்து நிவாரணம் கேட்டோம். அரிசி, மா, பருப்பு, சீனி என்று மாதம் நானூறு ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்கள் தந்தார்கள். இப்போது கையை விரித்துவிட்டார்கள். மூன்று மாதங்களாகியும் நிவாரணம் என்ற பேச்சே இல்லை. விதானை யாரைக் கேட்டால், வந்தால் அறிவிக்கிறோம் என்கிறார். அவரைக் குறைசொல்லிப் பயன் இல்லை. வீணாக விதானை யாருக்குக் கரைச்சல் தரக்கூடாது என்று நாம் அவர் பக்கம் போவதேயில்லை என்கிறார் தங்கராசா.



அண்மைக் காலமாக இராணுவ நிர்ப்பந்தத்தினால் அன்றாடம் தமது ஜீவனோபாயத்துக்கு உழைப்பவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது பொருளாதார அஸ்திவாரம் அசைக்கப்பட்டுவிட்டது. இந்த மாறிய சூழ்நிலையில் பல குடும்பங்களின் வயிற்றுக்கு சோறு போடும் தொழிலாக உள்ளது இந்த விறகு வியாபாரம்.

பொழுது சாயும் நேரம் நெருங்கியது. அங்கொன்றும் இங்கொன்றுமாக விறகு வியாபாரிகள் நகர ஆரம்பித்தார்கள். மணலில் கால்கள் பின்னிக் கொண்டன. காற்றுப் பலமாகியது. எதிர்க் காற்றோ காற்று வழமோ எப்படியிருந்தாலும் சைக்கிளில் ஏறி ஓடமுடியாது. பாரம் சைக்கிளைச் சரித்தது. சயிக்கிள்களை உருட்டினார்கள்.

"எங்களின் கதையை உங்கள் பேப்பரில் போடுங்கள் நேரமாகிறது வருகிறோம்" என்று விடை பெற்றார்கள்.

அவர்கள் சுமப்பது விறகல்ல. 'பாரச் சிலுவை' என்றார் பக்கத்தில் நின்ற வழிப்போக்கர்.

தூரத்தில் விறகு வியாபாரிகளின் உருவம் மங்கலாய்க் கரைந்து போவது தெரிகிறது. அவர்களும் அஸ்த்தமனமாகிறார்கள். ■

நன்றி: ஈழநாதம்

## நிமிர்வு

புரட்சியின் பூக்கள் இங்கே பூக்காமல் இல்லை
புத்தொளி வீசிப் பரவாமல் இல்லை
வரட்சியில் தமிழ் மண் நீரின்றி
வாடிக் கிடந்த போதும்.....
புரட்சியின் பூக்கள் இங்கே பூக்காமல் இல்லை!

இளந்தளிர்கள் இங்கே துளிர்க்காமல் இல்லை
இளைய தலைமுறை வளராமல் இல்லை
இன்னலில் தமிழ் மண் இடர்ப்பட்டு
இழிவுற்றுக் கிடக்கின்ற போதும்.....
இளந்தளிர்கள் இங்கே துளிர்க்காமல் இல்லை!

ஆணிவேர்கள் இங்கே அறுந்து போவது இல்லை
ஆயிரம் ஆயிரமாய் இன்று
ஆலமரத்து விழுதுகள்
அறுந்து விழுகின்ற போதும்....
ஆணிவேர்கள் இங்கே அறுந்து போவது இல்லை!

தமிழன் ஒருநாளும் தலைகுனியப் போவது இல்லை
தங்கத் தமிழன் தளரப் போவதும் இல்லை
தானைத் தலைவனவன்
தரணியில் உள்ள மட்டும்
தமிழன் ஒருநாளும் தலைகுனியப் போவது இல்லை!

- அகிலா பசுபதி

# காஷ்மீர் ஆளப்படவில்லை தக்க வைக்கப்பட்டிருக்கின்றது

## இந்தியப் பத்திரிகையாளர் குல்திப் நாயர்

ஒவ்வொரு முறையும் நான் காஷ்மீருக்குச் செல்லும்போதும் அது முன்பைவிடத் தூர விலகிச் செல்வது போலுள்ளது. சில மாதங்களுக்கு முன் நான் சிறீநகரில் இருந்தபோது எனக்கு ஏற்பட்ட உணர்ச்சியைக் குறிப்பிடும் சரியான சொல் 'அந்நியமாதல்' என்பதுதான். இப்போது மேலும் மோசம். நிலவரம் கடுமையாகிக் கொண்டே போகிறது. இந்த நிலைமைக்குப் பெரிதும் காரணம் இராணுவத்தினர். குறிப்பாக எல்லைக் காவல் படையினர்.

ஒரு மனித உரிமைக் குழுவின் உறுப்பினர் என்ற முறையில் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களின் வீடுகளுக்குச் சென்றேன். அவர்களுடைய முகத்தில் தென்பட்ட வேதனை நம் மனதை வாட்டுகிறது. ஒவ்வொருவரது கதையும் வித்தியாசமானது. ஆனால் அவர்களுடைய குற்றச்சாட்டு ஒன்றுதான். அதுதான் எல்லைக்காவல் படையின் மிருகத்தனம். "எதிர்த் தாக்குதலில் அத்துமீறலைப் புரிந்து கொள்ள முடிகிறது. எங்களுடைய எதிர்ப்பெல்லாம் படுகொலைகளைப் பற்றித்தான்" என்று ஒரு ஓய்வு பெற்ற அரச ஊழியர் கூறினார்.

எல்லைக்காவல் படையினர் பணிபுரியும் நெருக்கடியான சூழ்நிலை வட்டார மொழியுடனும் அவர்களுடைய கலாச்சாரத்துடனும் அறிமுகமற்ற நிலை இவைதான் காரணமென்று ஒரு அதிகாரி கூறினார். கடந்த மூன்று ஆண்டுகளில் ஏறத்தாழ 200 ஜவான்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

வியாபார நகரமான சோப்போரில் கடந்த ஜனவரி 6 ஆம் திகதி மேற்கொண்ட அதே நடவடிக்கையை மூன்று மாதங்களுக்குப் பின் ஏப்ரல் 10 ம் திகதி சிறீநகரிலும் எல்லைக் காவல் படை மேற்கொண்டது. இரண்டு இடங்களிலும் குற்றவாளிகள் நடமாடிய இடங்களுக்கு தீ வைக்கப்பட்டது. தப்பியோடியவர்களைக் கன்னாபின்னாவென்று சுட்டனர். சிறீநகரில் ஐந்து பேர் இறந்தனர். சோப்போரில் 44 பேர் மாண்டனர். எல்லைக் காவல் படையினர் காலி செய்த கட்டிடத்தை முன்னிட்டும் அவர்களிடமிருந்து இரண்டு தானியங்கித் துப்பாக்கிகள் பிடுங்கப்பட்டதை முன்னிட்டும் இந்தத் தீ வைப்புக்கள் நடந்தன.

பொதுமக்களின் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்திய இதுபோன்ற சம்பவங்களை நிர்வாகம் வெளிப்படையாகக் கண்டித்தது என்பதில் சந்தேகமில்லை. தேடப்படும் தீவிரவாதி கையில் கிடைக்கும் வரை ஒவ்வொருவரையும் இழுத்துச் செல்கின்றனர் என்பதுதான் பொதுமக்களிடையே ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளது. காவல் படையினர் எண்ணற்ற பேராசிரியர்களை, டாக்டர்களை, வக்கீல்களை, மாணவர்களை வெறும் சந்தேகத்தின் பேரில் அழைத்துக் கொண்டு போகின்றனர். விசாரணைத் தலங்களில் விடுதலைக்கு முன்பாகத் துன்புறுத்தப்படுகின்றனர். விசாரணையின் போதே பலர் மரணமடைந்துவிடுகின்றனர்.

பொதுவாக அவர்கள் செயற்படும் விதம் இதுதான். நிராயுதபாணியான பொதுமக்களைச் சோதனையிடுகின்றனர். இதற்கு யாரும் விலக்கல்ல முன்னாள் தலைமை நீதிபதிகூட இது போல் இரண்டு நாட்கள் அவதியுற்றார். ஏறத்தாழ பத்தாயிரம் பேர் காவலிலுள்ளனர்.

காவலில் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது என்று சிறீநகர் வக்கீல்கள் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் கூறினார். நீதிபதிகளின் விசாரணை உத்தரவுகள் கூட அமுல் படுத்தப்படுவதில்லை. இது சம்பந்தப்பட்ட வழக்குகள் கூட விசாரணையில் உள்ளன என்று அவர்கள் கூறினார்கள். இதிலிருந்து மீள எந்த வழியுமில்லை என்றனர். சட்டத்தின் மீது தங்களுக்கு நம்பிக்கை போய்விட்டது என்பதை வெளிப்படையாகவே கூறினர்.



ஜம்மு / காஷ்மீரில் நடந்த பொலிசாரின் எதிர்ப்புக் கூட்டம்



காஷ்மீர் கலவரப் பகுதியில் எல்லைக் காவற்படையினர்

தீவிரவாதிகளின் விடயத்தில் பாரபட்சம் காட்டுவதால் சிறீநகர் உயர் நீதி மன்றத்தை லாகூர் கோர்ட் என்று அவர்கள் கேலி செய்கின்றனர். உண்மையான சண்டை கோர்ட்டுகளில் அல்ல; வெளியேதான் நடக்கிறது. உறுதியான தொடர்ச்சியான வடிவில் இது நடக்கிறது. சிறு குழுக்கள் தங்கள் செயற்பாட்டை நிறுத்திக் கொண்டுவிட்டன. இரண்டு குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. ஒன்று ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி. இன்னொன்று கிஸபி முஜாகிதீன். முதலாவது குழு தனிநாடு கேட்பதால் இரண்டாவது குழுவைவிட பிரபலமாக உள்ளது. இரண்டாவது குழுவான முஜாகிதீன் பாகிஸ்தான் சார்புடையது. பாகிஸ்தானின் துப்பாக்கிகள் இவர்களிடம் உள்ளன என்று நிர்வாகத் தரப்பினர் கூறுகின்றனர். துப்பாக்கிளைப் பொதுமக்கள் விரும்பவில்லை. பொதுவாழ்வில் வன்முறையை அவர்கள் விமர்சிக்கின்றனர். மனித உரிமைக் கழகத்தைச் சேர்ந்தவரான எச். என். வாஞ்சூவையும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர்களில் ஒருவரான அப்துல் அகாத் குரு என்பவரையும் தீவிரவாதிகள் கொன்றுவிட்டனர் என்ற கருத்து நிலவுகிறது. துப்பாக்கி கலாச்சாரம் எங்களை அழித்துவிடும் என்று ஓய்வு பெற்ற நீதிபதி கூறினார்.

முஜாகிதீன் ஆதரவுத் தலைவர் என்று கருதப்படும் செய்யது அலி ஜிலானி, 'தனது தண்டனையின் கதை' என்ற புத்தகத்தின் முதல் பகுதியில் முன்னாள் உள்துறை அமைச்சரான முக்தி முகம்மது சய்யீதின் புதல்வியான ருபியா சய்யீதுவைக் கடத்தியதும், முகம்மது சய்யீது மகதியைக் கொன்றதையும் கண்டனம் செய்திருக்கிறார். என்றாலும் ஜிலானி மத்திய அரசை எதிர்க்கிறார் என்பதற்காக தீவிரவாதிகளிடம் மற்றவர்களைப் போல் பரிவு காட்டுகிறார். தீவிரவாதம் மக்களைப் பெருமளவு மாற்றியுள்ளது. தங்கள் போக்கில் காரியங்களைச் செய்துகொள்ள விரும்புகிறார்கள். துப்பாக்கியை வைத்திருப்பவர்களைப் பார்த்து பயப்படுகிறார்கள்.

நிர்வாகச் சீர்குலைவு போராட்டத்திற்கு இட்டுச் செல்கிறது. கவர்னர்களுக்கும், ஆலோசகர்களுக்கும் இடையே ஒருங்கிணைந்த செயற்பாடு இல்லை. கான்ஸ்டபிள் ரியாஸ் அகமதுவைக் கொன்றதுக்காக சிறீநகரில் சுமார் பதினையாயிரம் பொலிஸ்காரர்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்ட தெருவுக்கு வந்தனர். ஐ. நா. பார்வையாளர்கள் அலுவலகத்துக்கு முன்னே மறியல் நடத்தியபிறகு அவர்கள் பொலிஸ் தலைமை நிலையத்தினைக் கைப்பற்றினர். எல்லைக் காவல் படையினர் அவர்கள் மீது சுட்டனர். நிலைமை மேலும் மோசமடையவே இராணுவம் அழைக்கப்பட்டது. இராணுவம் பொலிசாரை நிராயுதபாணிகளாக்கினர். போராட்டக்காரர்களின் தலைமையகத்தை எந்தவித எதிர்ப்புமில்லாமல் காலி செய்தனர். எண்பது பொலிசார் டிஸ்மிஸ் செய்யப்பட்டனர். கலகத்துக்குப் பிறகு இரண்டு அதிகாரிகள் சஸ்பென்ஸ் செய்யப்பட்டனர்.

இது சிறீநகர் பள்ளத்தாக்கில் இறுக்கத்தைத்தான் அதிகப்படுத்தியது. சூரிய அஸ்தமனத்துக்குப் பின்னர் எங்கும் பீதி நிலவுகிறது. மறைந்துகிடக்கிற பயத்தையும், வன்முறையையும் ருசி கண்டுவிட்டனர் தீவிரவாதிகள். ஆனால் எந்த ஒரு பகுதியும் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இல்லை. எல்லைக் காவல் படையினர் அடையமுடியாத தூரத்தில் எப்பகுதியும் இல்லை. சோப்போரிலும், சிறீநகரிலும் இதுதான் நிலைமை. சோப்போருக்கு நான் பகல் நேரத்தில் சென்றேன். சிறீநகரில் ஐந்து இரவுகளைக் கழித்தேன்.

என்னுடைய கடைசி இரவு தங்களன்று சிறீநகர் பகுதிகளில் இரவு 9 மணிக்கு வலம் வந்தேன். எங்கும் மயான அமைதி. தெருவில் இராணுவ வீரர் எவருமில்லை. எல்லைக் காவல்படையினர் கூடாரங்களில் பதுங்கிவிட்டனர். தீவிரவாதிகள் எங்கோ இருந்தனர். அன்றிரவு ஒன்றிரண்டு முறை துப்பாக்கி வெடிக்கும் சத்தத்தைக் கேட்டேன். ஒருநாள் மதியம் தீவிரவாதிகள் எல்லைக் காவல் படையினரின் வாகனத்தின் மீது குண்டுகளை வீசி நான்கு பேரைக் கொன்றனர். நான் தங்கியிருந்த இடத்திலிருந்து 100 கஜ தூரத்திலுள்ள பஜார் பகுதியில் இது நடந்தது. ஆனால், அரை மணி நேரத்துக்குள் சகஜ நிலை திரும்பிவிட்டது. ஆண்களும், பெண்களும் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தனர். இப்படித்தான் வாழவேண்டும் என்பதை மக்கள் கற்றுக் கொண்டுவிட்டனர்.

பிரபலமான இரண்டு கோவில்களைப் பார்த்தேன். அவற்றை அவர்கள் கைவைக்கவில்லை. டிசம்பர் 6ம் திகதி அயோத்தி சம்பவத்துக்குப் பிறகு ஏறத்தாழ நாற்பது சிறு கோவில்கள் சிறிதளவு பாதிக்கப்பட்டன என்று அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது. சிறீநகரில் உள்ள கோவில்களின் வெளிப்புறச் சுவர்கள் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளன. இவற்றைச் சில விசமிகள் செய்துள்ளனர். ஆனால், பாபர் மசூதி கட்டடத்தை ஒரு வெறிபிடித்த கும்பல் இடித்தது.



திரும்பும்போது கோவில் நகரமான ஜம்மு வழியே வந்தேன். சிறீநகருக்கு நேர் மாறாக ஜம்மு அமைதியாக இருந்தது. இங்கிருந்து 100 கி. மீற்றர் தொலைவில் உள்ள தோடா என்ற இடத்தில் ஒரு இந்துத் தலைவர் கொல்லப்பட்டது ஒரு பரபரப்பைத் தோற்றுவித்துள்ளது என்றாலும் வகுப்பு ஒற்றுமையைப் பாதிக்கவில்லை. இந்திய ஆதரவுக் கோசங்கள் எழுப்பப்பட்ட உடைகளை ஜம்முவில்தான் அணிந்து செல்கிறார்கள். சந்தேகத்துக்கு இடமின்றி அவர்கள் தீவிரவாதிகளைக் கண்டனம் செய்கின்றனர்.

காஷ்மீரில் இருந்து வெளியேறிய காஷ்மீர் பண்டிட்கள் இன்னும் மோசமான நிலையில் நகரத்துக்கு வெளியே வசித்து வருகின்றனர். இவர்கள் அவ்வளவாக தீவிரவாதிகளை கண்டனம் செய்யவில்லை. தாங்கள் தீவிரவாதிகளால் வெளியேறவில்லை என்று அவர்கள் கூறினர். அரசு தங்களுக்கு ஜம்முவிலேயே ரேசன், இருப்பிடம், வேலை இவற்றைத் தருவதாக வாக்களித்ததால்தான் அங்கிருந்து வெளியேறினோம் என்றனர். அவர்கள் தாங்கள் குடிபெயர்ந்து வந்துள்ளதாகக் கருதவில்லை. என்றாவது ஒருநாள் திரும்பிச் செல்வோம் என்று கருதுகின்றனர்.

"அவர்கள் திரும்பிச் செல்ல ஏன் உதவக்கூடாது" என்று ஜிலானிடம் கேட்டேன். "அவர்கள் தம்முடைய மக்கள்தான். ஆனால், முதலில் ஏதாவது தீர்வு ஏற்படட்டும்" என்றார். ஒப்பந்தத்தின் சரத்துக்கள் என்னவென்று நான் அவரிடம் கேட்கவில்லை. காஷ்மீர் இந்தியாவுடன் சேர விரும்புகிறதா? பாகிஸ்தானுடன் சேர விரும்புகிறதா? என்பது பற்றி வாக்கெடுப்பு நடத்த வேண்டிய உறுதிமொழியை இந்தியா நிறைவேற்ற வேண்டுமென்று அவர் சில தினங்களுக்கு முன் என்னிடம் கூறினார். இந்தியா, பாகிஸ்தான், காஷ்மீர் இவற்றுக்கிடையே ஒத்த கருத்து ஏற்பட்டால் நான் அந்த ஒப்பந்தத்துடன் ஒத்துப் போவேன் என்றார். காஷ்மீர் என்றால் முழுமையான ஜம்மு -காஷ்மீர் மாநிலம்தான் என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

முன்பு எப்போதையும்விட வகுப்புப் பிரிவினை இப்போது பளிச்சென்று தெரிகிறது. எங்களுக்கு சூபிசத்தித்தில் நம்பிக்கை இருக்கிறது. அடியாழத்தில் நாங்கள் மதசார்பற்றவர்கள் என்றார் ஒரு பிரபலமான வக்கீல்.

ஒருநாள் அவர் சொன்னது மெய்யாகலாம். இந்தத் தருணத்தில் இந்தியா என்ன செய்ய வேண்டும்? மனிதத் தன்மையுள்ள நிர்வாகம், மக்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு, அத்துமீறல்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவது போன்றவை நீண்டகால நோக்கில் பயன்தரலாம். தற்போது காஷ்மீர் நம்மிடம் தக்க வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் நிர்வகிக்கப்படவில்லை. ■



# ஜேர்மனியில் நடைபெற்ற செஞ்சோலைக் கலைமாலை

சென்ற 14ம் திகதி ஒபகௌசன் நகரில் உள்ள நகர மண்டபத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஜேர்மன் கிளையின் தமிழர் பண்பாட்டு கழகத்தினரால் 'செஞ்சோலைக் கலைமாலை' என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

தமிழீழத்தில் செஞ்சோலைச் சிறார்களுக்கு உதவுமுகமாக நடாத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமானது. ஆயிரத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் கலந்து கொண்டு ஆதரவு நல்கினர்.

விழா மண்டபத்தினுள் நுழையும் பார்வையாளர்களை சீருடை அணிந்த தமிழ் மாணவர் அமைப்பின் ஜேர்மன் கிளையின் மாணவ மாணவிகள் வணக்கம் கூறி வரவேற்றது புதுமையானதாகவும் நேர்த்தியானதாகவும் இருந்தது.

மாவீரருக்கு அஞ்சலி செலுத்தி ஆரம்பமான செஞ்சோலைக் கலைமாலையின் முதலாவது நிகழ்ச்சியாக 'ஔவையார்' நாடகம் இடம்பெற்றது. விடுதலைப் புலிகள் இயக்க பிரான்ஸ் கிளையின் தமிழர் பண்பாட்டு கழக கலைஞர்கள் இந்த நாடகத்தினை சிறப்பாக தயாரித்து அளித்திருந்தனர்.

பல கட்டங்களில் பார்வையாளர்கள் கண்களில் கண்ணீர் மல்கி உணர்ச்சிவசப்பட்டதை காணக் கூடியதாக இருந்தது. விடுதலை உணர்வை, விடுதலையின் அவசியத்தை இன்றைய நாட்டின் தேவையை 'ஔவையார்' என்ற நாடகம் மூலம் சிறப்பாக வெளிப்படுத்திய அந்தக் கலைஞர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் எனப் பல பார்வையாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

அன்னை பூபதியின் தூய்மையான தியாக மரணத்தில் ஆரம்பித்த ஔவையார் நாடகம் இறுதிவரை சோர்வின்றி ஆர்வத்துடன் பார்க்கத் தூண்டியது.

ஒவ்வொரு காட்சியும் திட்டமிட்டு, ஒவ்வொரு கலைஞரும் ஒருங்கிணைந்து பல்வேறு செய்திகளை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் புதிய பார்வை, புதிய தளம், புதிய சிந்தனை என்ற குறிக்கோளோடு ஔவையார் என்ற பழம்பெரும் மூதாட்டி உயிர்த்திருந்தார்.

நாடகத்தின் இறுதியில் ஔவையார் "சுதந்திரம் சுதந்திரம்" என்று பாடியபடி அனைத்துக் கலைஞர்களுடனும் மேடையை விட்டு இறங்கி பார்வையாளர்களைச் சுற்றி பவனி வந்தார். கம்பீரமான அந்தப் பாடலை அனைத்து கலைஞர்களும் இணைந்து பாடியபோது பார்வையாளர்கள் உணர்ச்சி வசப்பட்டு ஔவையாரது துணிப்பைக்குள் செஞ்சோலை அமைப்புக்கு உதவுமுகமாக பணநோட்டுக்களைத் திணித்து தங்கள் பாசத்தை வெளிப்படுத்தினர். உணர்வு பூர்வமான அந்த அன்பளிப்பைப் பொதுமக்கள் தாமாகவே முன்வந்து செய்தபோது கருணை உள்ளம் மிக்க தமிழர் பெருந்தன்மை வெளிப்பட்டது.



நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பார்வையாளர்களில் ஒருபகுதி



பார்வையாளர்களை வரவேற்ற தமிழ் மாணவர் அமைப்பின் மாணவ மாணவியர்

நாடகத்தை அடுத்துப் பேசிய செஞ்சோலை அமைப்பின் ஜேர்மன் கிளைப் பொறுப்பாளர் திரு. பொ. ராஜசுந்தரம் (ரஞ்சன்) பேசும் போது, "ஈழத்தில் நடந்த பொது அறிவுப் போட்டியில் செஞ்சோலைச் சிறுவர்கள் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள். அறிவார்ந்த அந்த இளம் சந்ததியை கட்டிக்காக்கும் பெரும் பணி நம்முடையது" என்றார்.

இதனை அடுத்துப் பேசிய, தமிழர் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. கா. சிவநாதன், "கலை, வாழும் கலையாகவும் வாழவைக்கும் கலையாகவும் இருக்க வேண்டும். இந்தக் கலைமாலைக்கலை வெளிப்பாடு அத்தகையது. நமது குழந்தைகளை உலகம் காப்பாற்றும் என்று அசட்டையாக இருத்தல் கூடாது. அவர்களை நாம்தான் காப்பாற்ற வேண்டும் என அவர் குறிப்பிடுகையில் இங்குள்ள செய்தித் தொடர்பு சாதனங்களின் ஒரு பக்கசார்பான போக்கைக் கண்டித்தார். ஈராக் போரின் போது எண்ணைக் களிம்புக்குள் பிரண்டு மரணபிடியில் இருந்த நீர்நாய், நதிப்பெருக்கால் வெள்ளத்தில் அள்ளுண்டு போன மாடுகள், பன்றிகள், மொட்டை மாடியிலும் மர இடுக்குகளுக்குள்ளும் சிக்கிய பல இன பல நிற பூனைக்குட்டிகள் எல்லாம் காப்பாற்றப்படுவதை தொலைக்காட்சியில் காட்டுவார்கள். ஈழத்தில் பேரினவாத அரசின் கொடுமையால் நாடே அழிந்து கொண்டிருப்பதோ, அங்கு பெற்றோரை இழந்து வாடும் சிறுவர்களோ அவர்கள் கண்களில் படுவதில்லை. மாடுகளையும் பன்றிகளையும் பூனைகளையும் வேண்டுமானால் உலகம் காப்பாற்றட்டும். நமது குழந்தைகளை நாம்தான் காப்பாற்ற வேண்டும். அவர்கள்தான் நாளைய ஈழத்தை ஆழப்போகும் புலிக்குட்டிகள்" என்றார்.

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

## தென் தமிழீழத்தில்...

கங்களை ஏற்படுத்தி வாழ்வியல் அமைதியைக் குலைப்பது.

### இராணுவ நோக்கம்

இத் தேர்தல்கள் மூலம் தமிழீழ மக்களின் ஒருமைப் பாட்டையும் மனவுறுதியையும் குலைய வைத்துவிட்டு அதேநேரம் வடக்கில் இராணுவத் தாக்குதல்களை பல முனைகளில் இருந்து ஆரம்பிக்க சிறீலங்கா இராணுவம் திட்டம் தீட்டி வருகின்றது. இப்படிச் செய்தால் தமிழீழ விடுதலைப் புலிகளின் கவனம் தென் தமிழீழத்தின் பாதுகாப்பின் மீது செலுத்தப்பட வேண்டியிருக்கும். அதனைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளின் தாக்குத்திறனை மட்டுப்படுத்தி குடாநாடு மீதான ஆக்கிரமிப்புக்களை விஸ்தரிப்பது இராணுவத்தினருக்கு இலகுவாக இருக்கும் என சிறீலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் கருதுவதாகத் தெரிகிறது.

### முன்னேற்பாடுகள்

குடாநாட்டுக்குள் உள்ளிட்டு தாக்க முயன்றால் பாரிய இராணுவ இழப்புக்களையும் ஆட்சேதங்களையும் சந்திக்க வேண்டிவருமெனக் கருதும் சிறீலங்கா இராணுவம், வான் வழித்தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைக் கொன்றுகுவித்து யுத்தப் பீதி மூலம் குடாநாட்டு மக்களின் மனவுறுதியைச் சிதைக்க கனவு காண்கிறது. அதேவேளை விடுதலைப் புலிகளின் நிலைகள், தளங்கள் தாக்கப்பட்டன எனச் செய்திகள் வெளியிடப்பட்டு அப்பாவி மக்கள் மீதான இனஒழிப்பு நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும் சிறீலங்கா இராணுவம் ஏற்பாடாகச் செய்து வருகின்றது. இதற்கு முன்னோடியாக முல்லைத்தீவு, மன்னார்ப் பிரதேசங்களில் வான்வெளித் தாக்குதல்களை சிறீலங்கா இராணுவம் இப்போதே அதிகரித்துவிட்டது. இப்பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை கிடைத்த செய்திகளின்படி கடந்த பத்து நாட்களில் இருதடவை முள்ளிவாய்க்கால், மத்தளன் ஆகிய பகுதிகள் கடுமையான குண்டு வீச்சுக்கு இலக்காகியுள்ளன.

அதேவேளை வவுனியாவில் பெருமளவில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருவதாகவும் பெருந்தொகையான வாகனங்கள் பொதுமக்களிடம் இருந்தும், வர்த்தகர்களிடமிருந்தும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டு இராணுவப் பயன்பாட்டுக்கென கொண்டு செல்லப்படுவதாகவும் தெரியவருகின்றது.

### தேர்தல் நடத்த முடியாத நிலை

தென் தமிழீழத்தில் உள்ள உதவித் தேர்தல் ஆணையாளர்களை கொழும்புக்கு சிறீலங்கா அரசாங்கம் அவசரமாக அழைத்து ஆலோசனை நடத்தியுள்ளது. இவர்கள் இப்பிரதேசங்களில் தேர்தல் நடாத்த முடியாதெனக் கூறியதாகத் தெரியவருகின்றது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் பெருமளவிலான பிரதேசங்கள் இருப்பதால் இப்பிரதேசங்களில் தேர்தல் சாவடி அமைப்பதோ, தேர்தல் அலுவலர்கள் கடமையாற்றுவதோ புலிகளின் அனுமதியின்றி நடைமுறைச் சாத்தியமாகாது என இவர்கள் கூறியுள்ளனர். அத்துடன் வாக்காளர் பதிவேடுகள் செல்லுபடியற்றதாக உள்ளதெனவும், மக்கள் பெருமளவில் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளதால் முன்னைய வாக்காளர் பதிவேடுகளின்படி தேர்தலில் வாக்களிப்பது சாத்தியமில்லையெனவும், புதிய வாக்காளர் பதிவேடுகளை யுத்த சூழ்நிலையில் தயாரித்துக்கொள்ள முடியாதுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்ததாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### இராணுவத் தாக்குதலே நோக்கம்

வடக்கு கிழக்குப் பகுதிகளில் தேர்தல் நடாத்துவது சாத்தியம் இல்லையென சிறீலங்கா அரசாங்கத்தின் நிர்வாக ஊழியர்களே சொல்லும்போது சிறீலங்கா அரசு தேர்தல் நடாத்த முற்படுவது இராணுவத் தாக்குதல்களை அதிகரிப்பதற்கான நியாயப்படுத்தல் உத்தியே என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றர்.

### கொழும்புத் தமிழ்க் குழுக்களின் திரிசங்கு சொர்க்கநிலை

இதற்கிடையே தென்தமிழீழத்தில் தேர்தலை நடாத்தும் சிறீலங்கா அரசின் திடீர் அறிவிப்பு அரசாங்கத்தை அண்டி அடிதொழும் தமிழ்க்குழுக்களைச் சேர்ந்த அடியார்களுக்கு திரிசங்கு சொர்க்க நிலையைத் தோற்றுவித்துள்ளது. தேர்தல் நடந்தால் தாங்களே தேர்தல் களத்தில் பலியாக வேண்டி நேரும் என்பதை உணர்ந்த இக்குழுக்களும் கிழக்கில் தேர்தல் நடாத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லையெனவும் தேர்தலை ஒத்திவைக்குமாறும் கோரிக்கை விடுத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக இவர்கள் நடாத்திய கூட்டத்தில் 'ஈ. என். டி. எல். எவ்.' குழுவும் 'புளட்' குழுவும் கலந்துகொள்ளவில்லை எனவும் கொழும்புச் செய்திகள் மூலம் தெரியவருகின்றது. ■

## ஐ. நா. தலையீட்டை...

ருடைய பெயர் 1993 ஆம் ஆண்டுக்கான, சமாதானத்துக்கான நோபல் பரிசுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

### ஜெனிவாவில் நான்கு நாடுகள் முயற்சி

ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு, இலங்கை தேசிய இனப்பிரச்சினைக்கு அவசியமும் எனக்கோரும் தீர்மானம் ஒன்றை அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம், நோர்வே ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் உப ஆணைக்குழுவின் முன் கொண்டு வந்தனர். ஆயினும் சிறீலங்கா அரசு, இவர்களுடன் தொடர்பு கொண்டு இப்பிரச்சினையை, தாம் உள்நாட்டுக்குள்ளேயே தீர்க்கலாம் என நம்பிக்கையூட்டி இதனை வாபஸ் பெறச் செய்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### போலி வேடம்

இதனையடுத்து, வடக்கு -கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு சிறீலங்கா அரசாங்கம் முயல்கிறது. கொழும்பில் தமிழ்க்குழுக்களை அழைத்து, காலாவதியான மாகாண சபைகளுக்கு புத்துயிர் ஊட்ட முயற்சிக்கின்றது. இதற்காக வடக்கு, கிழக்கில் சுதந்திரமான, நீதியான தேர்தலை நடாத்தக்கூடியவாறும், சுமுகமான சூழ்நிலை ஏற்படும்வரை அந்த மாகாணத்தில் நிர்வாகத்தை ஏற்று நடத்துவதற்கும் இடைக்கால அமைப்பொன்றை ஏற்படுத்தப் போவதாக சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது. அல்காஜ் எம். எச். முகம்மது, அரசியல் கட்சிகளின் கருத்தைக் கேட்டறிதல் என்ற போர்வையில் தமிழ்க்குழுக்களைச் சந்திந்து பேசிவருவதாகத் தெரியவருகின்றது. 15 பேரைக் கொண்ட ஒரு குழுவை வடக்கு -கிழக்கு மாகாண ஆளுனரின் கீழ் இயங்கவைப்பதே அரசின் நோக்கமாகும். அதாவது ஒரு பொம்மை நிர்வாகத்தை வடக்கு கிழக்கில் உருவாக்குவதே சிறீலங்காவின் இலக்கு ஆகும். ■

## தேசியத்துவ உரு...

பௌத்த பிக்குகள், அகில இலங்கை பௌத்த காங்கிரசை மதவெறி ஊட்டுவதற்கும் சிங்கள மகாசபையை இனவெறி ஊட்டுவதற்கும் பயன்படுத்தினர். லங்கா சமசமாசக் கட்சி, கம்யூனிஸ்சக் கட்சி போன்றவற்றையும் பிக்குகள் ஆதரித்து தொழிலாளர் ஆதரவையும் பெற்றனர்.

1945 இல் இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய வல்பொல ராகுல தேரோ, பௌத்த சிங்கள இனவாதத்தின் எழுச்சிக்கு பெரும் பணி ஆற்றினார். 1946 இல் 'பிக்கு சுவஜ உறுமய' என்ற நூலை எழுதி, பிக்குகளின் ஒருங்கிணைப்புக்கும் உறுதிப்பாட்டுக்கும் வித்திட்ட ராகுல தேரோ, 1956 இல் பௌத்த மதத்தின் மறுதலிப்பு என்ற கூட்டறிக்கையை வெளியிட்டார். இவருடன் கூட்டாக இந்நூலை எழுதியர்கள் அனைவரும் படித்துப் பட்டம் பெற்று பெரும் பதவிகளில் இருந்த பிக்குகள். இந்த, பௌத்த மத மறுதலிப்பு என்ற நூலே 1956 -1958 இனக் கலவரங்களுக்கான வித்தை விதைத்தது. இவ்வாறு, சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு மேடை, இந்த நூல் எனலாம்.

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# குப்பி விளக்கு வாழ்வுக்கும் சிறீலங்கா முற்றுப்புள்ளி வைக்கிறது

மண்ணெண்ணெய் போதியளவு இன்மையால், யாழ் குடா நாட்டில் மக்கள் குப்பி விளக்கை, ஒரு சில நிமிடங்களுக்கே கொளுத்திப் பயன்படுத்துவது வழமை.

மாணவர்கள் நான்கைந்து பேர் வட்டமாக உட்கார்ந்து, குப்பி விளக்கொளியில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாடத்தை பதினைந்து நிமிடங்களுக்குப் படிப்பர். பின்னர், குப்பி விளக்கை அணைத்துவிட்டு ஒவ்வொருவரும் முறைப்படி தம்பாடத்தை பலமாகச் சொல்வர். இருளில் இருந்தபடியே அதனை மற்றவர்கள் கேட்பார்கள். கேட்பதற்கு அடையாளமாக 'உம்... உம்' என்று சொல்லி தாம் அவதானிப்பதாக வெளிக்காட்டுவார்கள். இவ்விதமாக மண்ணெண்ணையை மிச்சம் பிடித்தே மாணவர்கள் படிக்கின்றனர்.

இவர்களது படிப்பையும் நிறுத்தக் கூடிய முறையில், மண்ணெண்ணையின் அளவை 1500 பீப்பாய்களாக சிறீலங்கா அரசு குறைத்துள்ளது.

இதனால், விவசாயமும் மாணவர்களின் கல்வியும் முற்றாகப் பாதிப்படைகிறது. இதுவரை குடாநாட்டில், மாதம் ஒன்றுக்கு பத்துப் பேர் உள்ள குடும்பத்துக்கு ஒரு தடவை மட்டும் ஒரு லீற்றர் வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. ஐயாயிரம் பீப்பா எண்ணெயை வழங்கிய அரசு தற்போது அதனை 1500 பீப்பாக்களாக குறைத்துள்ளது. ■

## யாழ் குடா....

### வங்கிக் கடன்

யாழ் குடா நாட்டில் இயங்கும் வங்கிகளில் மக்கள் வங்கியைத் தவிர வேறெவரும் யாழ் விவசாயிகளுக்கு, விவசாயக் கடன் வழங்க முன்வரவில்லை. கடனை மீள அறவிடுவதில் ஏற்பட்ட பழைய கசப்பான அனுபவங்களை மனதில் வைத்து செயற்படுகின்றனர். ஆனால் மக்கள் வங்கி 1992 இல் கிளிநொச்சி மாவட்டத்திலும், சாவகச்சேரி, வடமராட்சிப் பிரிவுகளிலும் சிலருக்குக் கடன் வழங்கினார்கள். பயிர்ச்செய்கைப் பதிவில் பெயர் இல்லாமை, பயிர் காப்புறுதி செய்யாமை போன்ற காரணங்களால் பல விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. யுத்தம் தொடங்கியமையால் இங்கு பயிர்க் காப்புறுதி திணைக்களப் பணிகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் இலங்கை வங்கியினால் கடன் வழங்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறியமுடிகிறது. அப்படியானால் அந்த வசதியை இங்கு செய்ய வாய்ப்பிருந்தால் அதற்கான முயற்சிகளை யாழ் அரசாங்க அதிபர் முயற்சிக்க வேண்டியது அவசியம். ■

## தேசியத்துவ உரு.....

இவ்வாறு -அரசியல் ரீதியாக பௌத்த -சிங்கள பேரினவாதம் வளர்ந்து தமிழரை அடக்கி ஒடுக்கவும், தமிழ் மண்ணை அபகரிக்கவும், பொருளாதார ஒடுக்குமுறை, கல்வித்தடை போன்றவை அதிகரிக்கவும் வழிகாட்டியது. இதனால் தமிழரை, சிங்களவர் அன்னியராக - எதிரிகளாக பார்க்கும் தன்மை ஏற்பட்டது. தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி போன்ற தமிழர் அமைப்புக்கள் சனநாயக வழி எதிர்ப்புக்களைக் காட்டிய போதிலும் சிங்களம் மட்டும் சட்டம் (1958), சத்தியாக்கிரக ஒடுக்கல் (1960), கல்வித் தரப்படுத்தல் (1965 இரியகொல -1970 பதியுதீன் அரசாங்க வேலைகளில் தொழில் முயற்சிகளுக்கு மறுப்பு) போன்ற ஒடுக்குமுறைச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. கிழக்கு மாகாணம் அம்பாறை முதல் திருமலை, முல்லைத்தீவு வரை சிங்கள மயப்படுத்தப்பட்டது. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தால்போல் 1972 குடியரசு அரசியல் யாப்பின் மூலம் தமிழரது விருப்பமின்றி முழு இலங்கையையும் சிறீலங்காவாக்கினர். இதனால் தமிழர் நாடற்ற மக்களாக மாற்றப்பட்டனர். சிங்கள அரசு, படைபலத்தால் தமிழ் மக்களை அடக்கித் தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. இந்நேரத்தில் "Just and Unjust wars" என்ற நூலில் Michael Walzer, "மக்கள் எப்பொழுதும் இராணுவத்தால் தோற்கடிக்கப்பட முடியாது. களத்தில் நிற்கும் ஒரே இராணுவம்தான் எதிரியின் இராணுவம் என்ற நிலையில் மக்கள் தங்களைப் பாதுகாக்க கெரில்லா யுத்தத்தில் இறங்குவர். கெரில்லா யுத்தம் மக்களின் யுத்தம்" எனக்கூறுவதுபோல இந்த பொதுக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே தமிழர்களின் ஆயுத எதிர்ப்பு ஆரம்பமானது. ஜனநாயக எதிர்ப்புகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில், 1972 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கெரில்லா இயக்கமாகத் தோன்றியது. மக்களின் பேராதரவால் இருபது ஆண்டுகளாக சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கத்தின் இராணுவ அடக்குமுறை வடக்கு - கிழக்கில் நிலைபெறவிடாது, வடக்கு -கிழக்கு மக்கள் மண்மீட்புப் போரினை நடாத்துகின்றார்கள். நியூட்டன் குணரிங்கி கூறுவதுபோல "தமிழ்ப் பொது மக்கள் சிறீலங்கா அரசின் ஆயுதப் படையினரையும் வெறுக்கிறார்கள்; போராளிகளை மட்டுமே தங்களுக்குப் பாதுகாப்பும் தற்காப்பும் தரக்கூடிய சக்தியாகக் கருதுகின்றார்கள். எனவே வடக்கு -கிழக்கு மக்களின் ஆயுத எதிர்ப்பு சட்டபூர்வமானதும் சர்வதேச சட்டங்களுக்கு அமைந்ததுமானதாகக் காணப்படுகின்றது. இந்த ஆயுத எதிர்ப்பின் நோக்கம் தேசியத்துவத்தைக் கட்டி எழுப்புவதற்கான போராட்டமாக திகழ்கின்றது.

இந்த தேசியத்துவத்தை நிலைநாட்டுவதற்கான போரில் சிறீலங்கா அரசு, 5000 க்கும் மேற்பட்ட போராளிகளைப் பலியெடுத்து, 50,000 க்கும் மேற்பட்ட மக்களை இன அழிப்புச் செய்து, பொருளாதார தடை என்ற பெயரில் உலகின் ஒரு சமுதாயத்தை சத்தற்ற, சொத்தற்ற உருவங்களாக உருக்குலைக்கின்றது. ஒரு தேசிய இனத்தின் தேசியத்துவத்தை வேரறுக்க முனைகின்றது. இதனை எதிர்க்கும் வடக்கு -கிழக்கு தமிழரின் ஆயுத எதிர்ப்பு, தேசியத்தைக் கட்டி எழுப்புவதற்கான தேச நிர்மாண யுத்தமே.

இந்நேரத்தில் உலகெல்லாம் உள்ள தமிழர்கள், தமிழர் அமைப்புகளும், மனித நேயமுள்ளவர்களும் சிறீலங்காவின் வடக்கு -கிழக்கில் வாழும் தமிழர்களை சுயநிர்ணய உரிமையுள்ள மக்களாக சர்வதேச சமூகத்திற்கு முன்பாக வெளிப்படுத்தி, இப்பிரச்சினைக்குத் தீர்வு, விரைவுபெற உதவுவது மனிதக்கடமை. ■

## நெஞ்சில் நிற்கும்...

இப்ப வயதுபோனதுகள் சாகிறேல்லைத்தானே; சாப்பிடாமல் போய் செத்துப் போச்சுதுகள் எண்டால் நினைச்சு நினைச்சு அழோணும்." பாட்டியின் அன்பின் ஆழத்தை நினைத்தபோது கண்கள் கலங்கின.

சாப்பிட்டு முடிந்ததும், வாழைப்பழத்தை உரித்து உரித்துக் கையில் தந்தாள்.

பக்கத்தில் பசுப்பாலில் காய்ச்சிய பாயாசம்....

சாப்பிட்டு முடிந்ததும், "எண போட்டு வரப்போறன்...." என்றான் தினேஸ்.

போட்டு வா; அவன் ஜெயத்தானட்டைச் சொல்லு; கிழவி இன்னும் உயிரோடைதான் இருக்குதாமெண்டு" என்றுகூறி விட்டு கண்கலங்க தினேசுக் கன்னத்தை இரு கைகளாலும் தடவி விடை கொடுத்தாள்.

மோட்டார் சைக்கிள் நெடுக்குளம் தாண்டி ஓடிக்கொண்டிருந்தது.

பாட்டியின் சுருக்கு விழுந்த முகம்.... மடிப்பு விழுந்த நெற்றி..... அந்த நெற்றியில் இருந்த திருநீற்றுப் பூச்சு... பஞ்சு போன்ற தலைமுடி.....

பாட்டியும், அந்தப் பொறுப்பாளரின் அம்மாவும் மாறி மாறி கண்ணில் தெரிந்து கொண்டிருந்தனர். இவர்களைப் போன்றவர்கள் எம்மண்ணில் இருக்கும் வரை வீரமும், பண்பாடும் அழிந்துவிட முடியாது என்ற உண்மை மட்டும் உறுதியாகத் தெரிந்தது. ■

## ஜேர்மனியில்........

பார்வையாளர்களிடம் இருந்து பெற்ற பண முடிச்சை தமிழர் கலை பண்பாட்டுக் கழக பிரான்ஸ் கிளைப் பொறுப்பாளர் திரு. நாகேந்திரன் அவர்கள் கையளித்துப் பேசுகையில், "நாற்பதுக்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்ட இந்த நாடகம் உங்கள் வரவேற்பை பெற்றது, எங்களுக்கு உற்சாகத்தை கொடுக்கின்றது. இன எழுச்சிக்கான தரமான படைப்புக்களை உருவாக்க உங்களுடைய இந்த ஆதரவு ஊக்கமளிக்கிறது என்றார். கலைபண்பாட்டுக் கழக ஜேர்மன் கிளைப் பொறுப்பாளர் "ஔவையார், இங்கே பாடிய தாலாட்டில் பல லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நமது குழந்தைகள் பசியாறி உறங்க வழி பிறந்துள்ளது. இது நமது பாசத்தின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றது என்றார்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மன் கிளையின் தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தின் தமிழீழம் இசைக் குழுவினர் "தளிர் இசைத் தாலாட்டு" என்ற இசை நிகழ்ச்சியை நடாத்தினர். செஞ்சோலைச் சிறுவர்கள் பற்றிய உருக்கமான பாடல்களை அவர்கள் பாடியது வரவேற்பைப் பெற்றது. ■


உலகத் தமிழர் இயக்கம்

ஜேர்மனி

World Tamil Movement FRG -e. V.

உலகத்தமிழர் இயக்கத்தால் மூன்சன் நகரில் நடாத்தப்படும்

ஆர்ப்பாட்ட ஊர்வலம்

இடம்: Thiresienwise 80336 Munchen.

காலம்: 04.09.1993 சனிக்கிழமை

நேரம்: காலை 10-00 மணி

சிறீலங்கா அரசே!

- தமிழ் மக்கள் மீது நடாத்தும் இனவெறித் தாக்குதலை நிறுத்து!
- வடக்கு, கிழக்கு மாகாணக் குண்டுவீச்சை நிறுத்து!
- தமிழ் மக்கள் மீது போடப்பட்டிருக்கும் பொருளாதாரத்தடையை நீக்கு!
- கிளாலிப் பாதையில் நடைபெறும் படுகொலையை நிறுத்து!
- பூநகரிப் பாதையைத் திற!
- அப்பாவித் தமிழ்மக்கள் மீது தொடர்ச்சியாக நடாத்தும் மனிதஉரிமை மீறலை நிறுத்து!

சிங்கள அரசாங்கத்தின் அராஜகத்தைக் கண்டித்து பொங்கியெழும் தமிழீழ மக்களுக்காக உலகத் தமிழர் இயக்கத்தால் Munchen நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஏற்பாட்டு செய்யப்பட்டுள்ளது. அனைத்துத் தமிழீழ மக்களையும் இவ்வார்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு உரிமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

உலகத் தமிழர் இயக்கம்
ஜேர்மனி

World Tamil Movement FRG e. V
Deutschland



களத்தில்

தமிழீழத்தின் உண்மைச் செய்திகளைத் தாங்கிவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் செய்திமடல்

அரசியல் செய்திகள் - கடிதங்கள், போராளிகளின் செய்திகள், போராளிகளின் வாழ்க்கைக் குறிப்புகள், சிந்தனையைத் தூண்டும் இலக்கியக்களம், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணிகள், தமிழீழ ஆய்வுநிறுவனத்தின் செய்திகள், விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினதும் விடுதலைப்புலிகள் மகளிர் அணியினதும் தகவல்கள் எனப் பற்பல உண்மை நிகழ்வுகளை வெளிப்படுத்தும் மாதமிருமுறை வெளிவரும் சர்வதேசப் பத்திரிகை.

களத்தில் பத்திரிகை - வருடச் சந்தா

களத்தில் (மாதமிருமுறை)

பத்திரிகையை தொடர்ச்சியாக பெறவிரும்புவோர் ஒரு வருடத்துக்கான பணம் 16 பவுணை காசோலையாகவோ அல்லது தபாற்கட்டளையாகவோ "U.T.O." என்ற பெயருக்கு அனுப்ப வேண்டிய முகவரி:-

"களத்தில்"
U. T. O.
211, Katherine Road
London E6 1BU
U. K.

உங்கள் பெயர் ____________________

முகவரி ____________________



# ஒவ்வொரு புல்லும் ஒவ்வொரு பூவும்

- முருகையன்

வெண்மணல் மேவிய பனைவெளி எங்கும்
வீணையின் ஓசை பரவட்டும்
தண்கடல் மீது தோணிகள் ஓடி
தாவர சங்கமம் பெருகட்டும்
வயலில் பயிர்கள் நிமிரட்டும்
வானம் பொழிந்து குளிரட்டும்
தொழில்கள் ஓங்க விண்ணும் மண்ணும்
தூய்மை மேவி ஒளிரட்டும்.

ஒவ்வொரு மலையையும் பாடுகிறோம்
ஒவ்வொரு பூவையும் சூடுகிறோம்.

வன்னி மண்ணின் காடும் குளமும்
மாடும் கன்றும் பாடுகிறோம்
மீனும் மீனவர் பாடும் வாவி
விரியும் கிழக்கைப் பாடுகிறோம்
சின்னஞ் சிறிய முல்லைப் பூவும்
சிறகு விரிக்கும் தாமரையும்
வண்ண வண்ண வெள்ளி மீனும்
வான வெளியும் பாடுகிறோம்.

ஒவ்வொரு புல்லையும் பாடுகிறோம்
ஒவ்வொரு நெல்லையும் நாடுகிறோம்
ஒவ்வொரு கல்லையும் தேடுகிறோம்
ஒவ்வொரு பூவையும் சூடுகிறோம்.

எங்கள் மண்ணின் ஒவ்வொரு புல்லையும்
ஒவ்வொரு பூவையும் பாடுகிறோம்.

எங்கள் மண்ணின் ஒவ்வொரு புல்லையும்
ஒவ்வொரு பூவையும் நாடுகிறோம்
இங்கு தோன்றும் ஒவ்வொரு பிள்ளையும்
இறைவன் ஆவதை நாடுகிறோம்
இறைவி ஆகவும் இறைவன் ஆகவும்
இலங்கும் சூழ்நிலை தேடுகிறோம்.

ஒவ்வொரு புல்லையும் பாடுகிறோம்
ஒவ்வொரு பூவையும் சூடுகிறோம்.

இறைமை நீதியின் விதி தானம்
எறியும் ஓர் கணை ஏவுகிறோம்.

U.T.O 211 KATHERINE RD, LONDON E6 1BU, UK Tel / Fax : 081-470 8593
T.C.G GUMMERSBACH - 31 GERMANY
T.C.C 341 Rue des Pyrenees 75020 Paris, France T: 435 81142 F: 435 81191
W.T.C.C BEDER Str - 101, 8002 ZURICH SWITZERLAND T/F · 01/2810852, 077/818609
T.C.C P.O.BOX 694, MULGRAVE NORTH VICTORIA 3170, AUSTRALIA T: 03-457 6347, F:03-5618224
T.C.C P.O.BOX 1699 VIKA 0110 OSLO - 1, NORWAY T: 02-191260 F: 02-190114
L.T.T.E P.O.BOX47, 7600 STRUER DENMARK Tel / Fax : 97-841231
T.C.C Via MARIANO STABILE - 34 90139 PALERMO, ITALY Tel / Fax: 091-611 3179

Printed by Observer Group Newspapers.